www.padippkam.com

○ திருமணத் தளங்கள்! ○ இணைய கேள்வி-பதில்

தமிழ்

தமிழின் ஒரே இன்ஃபோ டெய்ன்மென்ட் மாத இதழ்

# தமிழ் இன்டர்நெட் உலகம்

இணையத்திற்கான முதல் தமிழ் மாத இதழ்!

4 : 6 ஏப்ரல் 2003 விலை ரூ.10

Edit View Favorites Tools Help | Back Forward Stop Refresh Home Search Favorites History Mail Print

Best of the Web · Channel Guide · Customize Links · Free HotMail · Internet Start · Microsoft · Windows Update · Windows

http://www.kanitamil.com



## ரெடிஃப் போல் (Rediff bol)

-ஒரு பார்வை

## செவ்வாய் கிரகத்தில் இன்டர்நெட்!

## மேற்படிப்பு, வேலை வாய்ப்புகளுக்கு...

-வழிகாட்டும் வலைமனைகள்

படிப்பகம்

www.padippkam.com

# வல்லுநராக ஒரு வாய்ப்பு!

சி-ஷார்ப் பற்றி எளிமையாக சொல்ல இதை தவிர வேறு ஒரு நூல் இல்லை.




விலை ரூ. 40




கம்ப்யூட்டரில் கணக்குகளை எவ்வாறு எழுதுவது என்று எளிமையாக விளக்கும் புத்தகம்.

விலை ரூ. 15

கம்ப்யூட்டர் பற்றிய அடிப்படை தகவல்களை தெரிந்துக் கொள்ள உதவும் புத்தகம்




விலை ரூ. 10




கம்ப்யூட்டர் துறையில் படித்த, படிக்கப் போகும் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம்.

விலை ரூ. 15

| | | | |
|---|---|---|---|
| எம்எஸ் ஆஃபீஸ் டிப்ஸ் விலை | ரூ. 40 | கம்ப்யூட்டர் கேள்வி-பதில் | ரூ. 10 |
| கம்ப்யூட்டர் அசெம்பிளிங் | ரூ. 30 | இ-மெயில் | ரூ. 10 |
| விண்டோஸ் 101 டிப்ஸ் | ரூ. 30 | வெப்டிசைனிங் (எச்டிஎம்எல்) | ரூ. 10 |

தமிழ் வெப் டைரக்டரி ரூ. 15

புத்தகங்களை பெற விரும்புவோர் புத்தக விலையோடு ரூ.10 சேர்த்து கணித்தமிழ் மீடியா என்ற பெயரில் டிடி (DD) அல்லது எம்ஓ (MO) அனுப்பி வைத்தால் பாதுகாப்பாக கூரியர் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கிறோம். புத்தகங்கள் விபிபியில் (VPP) அனுப்பப்படமாட்டாது. எம்ஓ படிவத்தின் தகவல் பகுதியில் தங்களுக்கு தேவையான புத்தக விவரங்களையும் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்பவும்.

## கணித்தமிழ் மீடியா KANITAMIL MEDIA

புதிய எண் : 60, மாடல் ஸ்கூல் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை-6. ☎ 28 29 33 32.

படிப்பகம்

www.padippkam.com



# ரெடிஃப்போல்- ஒரு பார்வை...

☞வசந்தகுமார்

நண்பர்களை குழுவாக்கி, நினைத்த நேரங்களில் தொடர்பு கொள்ள உதவும் பல்வேறு மெசெஞ்சர்களைப் பற்றி தொடர்ந்து கண்டு வருகிறோம். இந்த இதழில், நம் தாய்மொழியில் நண்பர்களுடன் எளிமையாக அரட்டையடிக்க உதவும் ரெடிஃப்போல்.



துரித மின்னஞ்சல் சேவைகள், சூடான செய்திகள் போன்றவற்றை அளித்து, இணையப் பயனாளர்களுக்கு செல்லப் பிள்ளையாக இருக்கும் இந்திய சர்வரான ரெடிஃப் தளத்தின் மெசெஞ்சர். யாஹூ, எம்எஸ்என் போன்ற மெசெஞ்சர் சேவைகளைப் போன்றே மேம்பட்ட வசதிகளுடன், அவற்றை விட சிறப்பு அம்சங்களையும் கொண்ட மெசெஞ்சர். நண்பர்களுடன் நம் தாய் மொழியிலேயே அரட்டையடிக்கும் வசதியை இந்த மெசெஞ்சர் கொண்டிருப்பது இதன் தனிச்சிறப்பு.

படம்-1




### எங்கே உள்ளது, எப்படிப் பெறுவது?

www.rediff.com தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம். பிரவுசிங் சென்டர்கள் என்றால் டெஸ்க்டாப்பில் சிகப்பு நிற லோகோவுடன் ஒரு ஐகானாக காட்சியளிக்கும். இதை கிளிக் செய்து, மெசெஞ்சரை இயக்கலாம்.

ஐகானை கிளிக் செய்தவுடன் மெசெஞ்சர் திரை தோன்றும். அதில் File⇨Login கிளிக் செய்தவுடன் தோன்றும் திரையில் நமது மின்னஞ்சல் முகவரி, நுழைவுச் சொல் அளிக்க வேண்டும். ரெடிஃப் மெசெஞ்சருக்கென தனியாக பதிவு செய்யவேண்டியதில்லை. ரெடிஃப் தளத்தில் நமக்கான மின்னஞ்சல் முகவரி, நுழைவுச் சொல்லையே மெசெஞ்சருக்கும் பயன்படுத்த வேண்டும்.

முகவரி, நுழைவுச் சொல் அளித்தபின் அடுத்துள்ள கட்டத்தில் நமக்குப் பிடித்த எளிமையான பெயரை கொடுக்கலாம். (பார்க்க படம்-1)

இந்த பெயர் மெசெஞ்சரில் நமது பெயர் இருக்க வேண்டிய இடத்திலும், ரெடிஃப் அரட்டை அறைகளுக்குச் செல்லும் போதும், நமது முகவரிக்கு பதில் தோன்றும். ஒவ்வொரு முறை மெசெஞ்சரை லாகின் செய்யும் போதும் இந்தப் பெயரை மாற்றிக் கொள்ளலாம்.

### நண்பர்களை இணைக்க!

லாகின் செய்தபின் நமக்கான மெசெஞ்சர் திரை தோன்றும். இதில் பல மெனுக்கள், பட்டன்கள் காட்சியளிக்கும். இவற்றைப் பற்றி காணும் முன்



படிப்பகம்

www.padippkam.com



நண்பர்களை நமது மெசெஞ்சர் வரிசையில் சேர்ப்பது அவசியம். நாம் மெசெஞ்சரில் இணைக்க விரும்பும் நண்பர்களும் கட்டாயம் ரெடிஃப் தளத்தில் மின்னஞ்சல் முகவரி வைத்திருப்பதோடு, ரெடிஃப் போல் மெசெஞ்சரையும் பயன்படுத்துபவராக இருத்தல் வேண்டும். சிலர் ரெடிஃப் தளத்தில் மின்னஞ்சல் முகவரி வைத்துக் கொண்டாலும், மெசெஞ்சரை பயன்படுத்துவதில்லை. இவர்களை நண்பர்கள் வரிசையில் இணைப்பது வீண்!




படம்-2

நண்பர்களை இணைக்க மெசெஞ்சர் திரையில், Add Friend என்ற பட்டன் இருக்கும். இதை கிளிக் செய்ய ஒரு டயலாக் பாக்ஸ் தோன்றும். இதில் உள்ள முதல் கட்டத்தில் இணைக்க விரும்பும் நண்பரது முழு மின்னஞ்சல் முகவரியையும் அளிக்கவேண்டும். (எ-டு) vannan_vannan@rediffmail.com)

படம்-3




அதன் கீழ் உள்ள கட்டத்தில் அந்த நண்பருக்கு ஏதேனும் செய்திகள் சொல்ல விரும்பினால், அதை சுருக்கமாக தெரிவிக்கலாம். (படம்-2) பின் Add கிளிக் செய்தவுடன், அந்த நண்பர் நம் நண்பர்கள் வரிசையில் வந்து அமருவர். இது போல் எத்தனை ரெடிஃப் நண்பர்களை வேண்டுமானாலும் இணைக்கலாம்.

இணைக்கப்பட்ட நண்பர் ஆன்லைனில் இருந்தால் Online என்ற சொல்லுக்கு கீழ் அவர் பெயரும், மெசெஞ்சர் பயன்படுத்தவில்லையெனில் offline சொல்லுக்குக் கீழ் அவர் பெயர் மிளிரும் (படம்-3). எம்எஸ்என் மெசெஞ்சரைப் போலவே ஆன்லைனில் இல்லாத நண்பர்களுக்கு செய்தியனுப்ப இயலாது. ஆன்லைனில் மிளிரும் நண்பர்களின் பெயர்களை கிளிக் செய்து செய்திகள் அனுப்பலாம்.

ஆஃப்லைனில் உள்ள நண்பர்களது பெயர்கள் மீது கிளிக் செய்து அவர்களுக்கு ரெடிஃப் தளத்தின் மின்னஞ்சல் அனுப்பும் பக்கத்துக்கு செல்லலாம் எளிமையாக.

திரையில் ஆன்லைன், ஆஃப்லைன் நண்பர்களது வரிசையின் கீழ் 'Waiting for authorisation' என்ற சொல் இருக்கும். நாம் இணைத்துள்ள நண்பர்களிடம் சென்று அனுமதி கேட்கும். அனுமதி கேட்கும் நேரத்தில் இச்சொல் மிளிரும். நண்பர்கள் அனுமதி அளித்தபின் நம் மெசஞ்சர் வரிசையில் அவர் பெயர் நிரந்தரமாக தங்கும். அவர் அனுமதி மறுத்தால் அச்செய்திகளையும் நமக்கு அறிவிக்கும்.



படிப்பகம்

www.padippkam.com



### ஆன்லைன் நண்பர்களுக்கு தமிழில் செய்தியனுப்ப!

ஆன்லைனில், அதாவது ரெடிஃப் மெசெஞ்சரை இயக்கிக் கொண்டிருக்கும் நண்பர்களுக்கு செய்தியனுப்ப, அவர் பெயர் மீது டபுள்-கிளிக் செய்தோ, Options⇨Send Message ஆப்ஷனைப் பயன்படுத்தியோ செய்தினுப்பும் திரையைப் பெறலாம்.

செய்தியனுப்பும் திரை யாஹூ மெசஞ்சர் திரையைப் போலவே, எளிமையாக, பல மெனுக்கள் கொண்ட திரையாக காட்சியளிக்கும். மெஸேஜ் பாக்ஸில் செய்தியை டைப் செய்து Send கொடுக்கலாம். எழுத்துருக்கள், எழுத்தின் அளவு, வண்ணங்களை மாற்றியும், ஸ்மைலீக்கள் எனும் சித்திரங்களை பயன்படுத்தியும் செய்திகளை அழகுறச் செய்யலாம் (படம்-4).




படம்-4

மொழிகளை தேர்வு செய்ய இத்திரையில் சிறிய ஐகான் ஒன்று இருக்கும். அல்லது Language மெனுவை பயன்படுத்தலாம். நமது தாய் மொழியைத் தேர்வு செய்தவுடன், நாம் ஏற்கனவே அறிந்த டிரான்ஸ்லிட்ரேஷன் முறைப்படி, ஆங்கிலத்தில் நாம் டைப் செய்தவை தமிழில் மாறும். அதாவது 'Vanakkam' என்பது வணக்கமாக தமிழில் உருமாறும். எனவே தமிழ் டைப்பிங் தெரியாமல் தமிழில் டைப் செய்து செய்தியனுப்பலாம். இதனால் நிரம்ப ஆங்கில அறிவு என்பது தேவையற்றதாகி விடுகிறது.

### ஆன்லைன் விளையாட்டுகளினூடே அரட்டை!

நண்பர்களிடம் அரட்டையடிக்கும் போது அவர் வெளியில் சென்று விட்டாலோ, போர் அடித்தாலோ, மெசெஞ்சரிலிருந்தே எளிமையான சுவாரஸ்யமான விளையாட்டுகளை விளையாடலாம். விளையாடிக் கொண்டிருக்கும் போது நண்பர்கள் ஆன்லைனில் வந்தால் அதை குறிப்புடன் தெரியப்படுத்தும்.

### புதிதாக வரும் மின்னஞ்சல்களைப் பார்க்க!

மெசெஞ்சர் திரையிலிருந்தே நமக்கு ரெடிஃப் தளத்திற்கு புதிதாக வரும் மின்னஞ்சல்களை அறிந்து கொள்ளலாம். புதிய மின்னஞ்சல்களின் வருகையை தெரிவிக்கும் சொல் மெசெஞ்சரின் திரையில் இருக்கும். இதுபோல் புதிதாக மின்னஞ்சல்கள் வரும்போதெல்லாம் டெஸ்க்டாப்பின் வலது மூலையில் சிறிய செய்தி வந்து தெரிவிக்கும். உடனே திரையிலுள்ள checkmail என்ற ஆப்ஷனை கிளிக் செய்து நேரடியாக ரெடிஃப் மின்னஞ்சல் பக்கத்துக்குச் செல்லலாம்.

### ரெடிஃப் நண்பர்களைத் தேடிப் பெறலாம்!

நம் நண்பர்களை மட்டுமல்ல, ரெடிஃப் தளத்தில் பதிவு செய்திருக்கும் அத்தனை பேரில் நமக்கு

படம்-5






படிப்பகம்

www.padippkam.com



பிடித்தமானவர்களை தேர்ந்தெடுத்து நண்பர்களாக்கிக் கொள்ளலாம். இதற்கு Need a friend என்ற மெனுவை கிளிக் செய்ய நண்பர்களைத் தேட உதவும் திரை தோன்றும் (படம்-5).

இத்திரையில் தேட வேண்டிய நண்பரின் பாலினம், வயது வரம்பு, நாடு, நகரம் போன்றவற்றை தேர்ந்தெடுத்து 'Go' கொடுத்தால், நாம் கொடுத்த தகவல்களுக்கு பொருத்தும் நண்பர்களது வரிசை வந்தமரும். இவர்களில் நமக்குப் பிடித்தவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நம்மைப் பற்றிய விவரங்களை அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.




படம்-6

### ரெடிஃப் அரட்டை அறைகளுக்கு நேரடியாகச் செல்ல!

ரெடிஃப் தளத்தின் அரட்டை அறைகள் கொண்ட பக்கத்திற்கு மெசெஞ்சரிலிருந்து நேரடியாகச் செல்லலாம். Chat என்ற மெனுவை கிளிக் செய்ய, அரட்டை அறைகளுக்கு நம்மை வரவேற்கும் ஒரு திரை தோன்றும். அதன்பின் அனைத்து அறைகளையும், பிரிவுகளையும் கொண்ட பக்கம் தோன்றும் (படம்-6) இதில் நாம் லாகின் செய்யும்போது அளித்த வீருப்பப் பெயர்தான் நமக்கான பெயர். ஏதேனும் ஓர் அரட்டை அறையைத் தேர்ந்தெடுத்து அரட்டையடிக்கலாம்.

படம்-7




### சூடான செய்திகளை உடனுக்குடன் அறிய!

சூடான செய்திகள், கிரிக்கெட் செய்திகள், நாட்டு நடப்புகளை உடனுக்குடன் அளிக்கிறது. ரெடிஃப் போல் மெசெஞ்சர். மெசெஞ்சர் திரையில் மேலே உள்ள மெனுக்களில் முதலில் நண்பர்கள் வரிசைக்கான மெனுவும், அதைத் தொடர்ந்து செய்திகளுக்கான மெனுவும் இருக்கும். செய்திகளுக்கான மெனுவை கிளிக் செய்ததும், நண்பர்கள் வரிசை மறைந்து பல்வேறு துறை சார்ந்த செய்திகள் கொண்ட சிறிய பக்கம் மெசெஞ்சர் திரையிலேயே தோன்றும். அச்செய்திகளை விரிவாகக் காண அவற்றின் மீது கிளிக் செய்து தனியாக ஒரு பக்கத்தில் காணலாம்.

செய்திகள் மட்டுமல்லாது கிரிக்கெட் செய்திகள், ஜோதிடத்துக்கெனவும் தனி மெனுக்கள் வரிசையாக அமர்ந்திருக்கும். நண்பர்கள் கலந்துரையாடலுக்கும், மெசெஞ்சர் வரிசையிலிருக்கும் அனைவரிடமும் ஒரே நேரத்தில் குழுவாக இணைந்து அரட்டையடிக்கும் கான்பரன்ஸ் (Conference) வசதி உள்ளது. Options⇨Start Conference-ஐ தேர்ந்தெடுத்து இந்த வசதியைப் பெறலாம். (படம்-7) ஆனால் கலந்துரையாடலுக்கு அழைக்க விரும்பும் நண்பர்கள் அனைவரும் ஆன்லைனில் இருத்தல் வேண்டும்.

### வெளியேறும் முன்

ரெடிஃப் போல் மெசெஞ்சரிலிருந்து வெளியேறும் முன் கண்டிப்பாக File⇨Logout செய்த பின்னரே வெளியேற வேண்டும். அப்படியே மூடிவிட்டால், அடுத்து வரும் பயனாளர்கள் ரெடிஃப் போல் மெசெஞ்சர் ஐகானை கிளிக் செய்யும் போது நமக்கான மெசெஞ்சர் பகுதிதான் தோன்றும். முறைகேடுகள் நடைபெற வாய்ப்புகள் அதிகம். எனவே Logout செய்து வெளியேறுவது அவசியம்.



படிப்பகம்

www.padippkam.com



# ஒரு முகவரிக்குள் பல முகவரிகள்!

☞பிரேம்

யாஹூ தளத்தில் மின்னஞ்சல் முகவரி வைத்துள்ளவர்கள், அரட்டைக்கென ஒரு முகவரி, மெசஞ்சருக்கென ஒரு முகவரி, மின்னஞ்சலுக்கென ஒரு முகவரி என பல முகவரிகளை உருவாக்கலாம், ஒரே முகவரியின் கீழ்.

அதாவது-ஒரே யாஹூ மின்னஞ்சல் முகவரியின் கீழ் எளிமையாக பல துணை முகவரிகளை உருவாக்கலாம். இதற்கு யாஹூ மெசஞ்சர் இயக்கி, அதில் Login⇨My Profile தேர்ந்தெடுத்து, Create or edit my profiles கிளிக் செய்யவும்.




•நமது சொந்த விவரங்களுக்கான தனி வலைப்பக்கம் தோன்றும். அதில் நமது மின்னஞ்சல் முகவரியும், விவரங்களும் இருக்கும். அந்தப் பக்கத்தில் Create new Public Profile என்ற சொல்லை கிளிக் செய்ய, ஒரு பக்கம் தோன்றும். அதில் புதிதாக உருவாக்கவேண்டிய மின்னஞ்சல் முகவரியை அதாவது எளிமையான ஒரு பெயரை அளிக்கவும். (எ-கா Kanmani) பின் கேட்கும் கட்டங்களில், நமது விவரங்களை அளித்து Ok கொடுக்க, அந்த பெயர் நம் துணை மின்னஞ்சல் முகவரியாக உருவாகிவிடும். (எ-கா vannan@yahoo.com)




•இப்போது முதலில் தோன்றிய வலைப்பக்கம் தோன்றும். அதில் உங்கள் முதன்மை மின்னஞ்சல் முகவரியும், உருவாக்கிய துணை முகவரியும் வரிசையிலிருக்கும். இதுபோல் ஐந்து துணை முகவரிகளை தொடர்ந்து உருவாக்கலாம். உருவாக்கிய துணை முகவரிகளில் மாற்றங்கள் செய்யவோ, அழிக்கவோ அதே பக்கத்திலுள்ள Edit/delete Contact Into என்பதை கிளிக் செய்ய வேண்டும்.

• உருவாக்கிய துணை முகவரிகளை நண்பர்களிடம் தாராளமாக அளிக்கலாம். அவர்கள் துணை முகவரிக்கு அனுப்பும் மின்னஞ்சல்கள் நமது முதன்மை முகவரி உள்ள இன்பாக்ஸ் பகுதிக்கு வரும்.

•துணை முகவரி கொண்டே மின்னஞ்சல் முகவரி, மெசஞ்சர் லாகின் செய்யலாம். நுழைவுச் சொல் மட்டும் ஒன்றுதான்.

• யாஹூ மெசஞ்சர் பயன்படுத்தும்போது நண்பர்களுக்கு செய்தியனுப்பும் மெசேஜ் பாக்சில், To: கட்டத்தில் நமது மின்னஞ்சல் முகவரியுடன் துணை முகவரிகளும் வரிசையில் வந்தமரும். இவற்றில் ஒன்றை தேர்வு செய்து கொண்டு நண்பருக்கு செய்தியனுப்பலாம்.

• செய்தி பெறும் நண்பரின் திரையில் நமது துணை முகவரி மிளிரும். இதுபோல் அரட்டை அறைகளுக்குச் செல்லும் போதும், அறைகளைத் தேர்வு செய்யும் பக்கத்தில், துணை முகவரிகளில் ஒன்றைத் தேர்வு செய்து அந்தப் பெயரில் அரட்டையடிக்கலாம்.

கொசுறு செய்தி :

நம்மூரில் பலர் பெண்கள் பெயரில் துணை முகவரிகளை உருவாக்கிக் கொண்டும், பெண்கள் ஆண்கள் பெயரில் துணை முகவரிகளை உருவாக்கிக் கொண்டும் மற்றவர்களை கலங்கடித்துக் கொண்டிருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippkam.com



கரிகாலன்

# சிறந்த தொழில்நுட்ப படிப்புகள்!

+2 தேர்வுகள் முடித்து மாணவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் நேரம். விடுமுறையில் பொழுதைக் கழித்து பின் ஏதோ ஒரு படிப்பில் சேர்ந்து அரசுப் பணிக்காக விண்ணப்பிக்கும் காலம் போய்விட்டது. மேற்படிப்புகளை கவனமுடன் தேர்ந்தெடுத்து வருங்காலத்தை வளமாக்கிக் கொள்ள ஒவ்வொரு இளையரும் போராட வேண்டிய சூழல் இன்று. சரியான மேற்படிப்பு, மேற்படிப்புகளுக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளுக்கு வழிகாட்டும் சிறந்த வலைமனைகளின் தொகுப்பு.



### பிடித்த துறைகளில் உயர்பதவிகளை அடைய!

+2-ல் நல்ல மார்க் எடுத்து விட்டால் உடனே மருத்துவம் அல்லது பொறியியல் இவற்றில் தான் சேர வேண்டும் என்பது பெற்றோரின் ஆவல். ஆனால் மாணவர்களின் விருப்பம், எதிர்காலக் கனவுகளுடன் பொருந்தி அவற்றை அடைய வழிகோலும் மேற்படிப்புகளை படிக்க என்ன செய்ய வேண்டும்.

அத்துறையில் உயர் பதவிகளில் அமர என்ன செய்ய வேண்டும் போன்ற தகவல்களை அளிக்கிறது இத்தளம். குறிப்பாக ஹோட்டல் மேனேஜ்மென்ட், ஃபேஷன் டெக்னாலஜி, பயோ டெக்னாலஜி போன்ற துறைகளில் ஈடுபட விழையும் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை தனித்தனி பகுதிகளில் அழகாக எடுத்தியம்புகிறது இத்தளம்.

தளத்தின் பெயர் : www.naukri.com/careergraph

### சிறந்த தொழில்நுட்ப படிப்புகளை வழங்கும் மையங்கள்!

இந்தியாவிலுள்ள பல்வேறு தொழில்நுட்ப கல்லூரிகள்/பல்கலைக் கழகங்கள், பயிற்சி மையங்களை வரிசைப்படுத்தியுள்ளது இத்தளம். இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் கேரியர் அண்டு ஹையர் எஜூகேஷன் (IICHE-Indian Institute of Career and Higher Education) வழங்கும் பட்ட/பட்டய படிப்புகள் விண்ணப்பிக்கும் முறைகள்/பாடப் பிரிவுகளின் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. நாம் விரும்பும் படிப்புகளை வழங்கும் மையங்களை தேடல்பொறியின் மூலம் தேடிப் பெறலாம்.

தளத்தின் பெயர் : www.planyourcareer.com




### ஆளுமைக்கு ஆன்லைனில் தேர்வுகள்

தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி பாடங்களில் மட்டும் தேறினால் போதாது. நேர மேலாண்மை, ஆளுமை போன்ற தகுதிகளை வளர்த்துக் கொள்வது அவசியம் என்று சொல்வதோடு, வல்லுநர்களைக் கொண்டு நமக்கு ஆன்லைனில் கற்றுத் தருகிறது இத்தளம்.

பல்வேறு தேர்வுகளையும் நடத்துவதோடு, நமது மதிப் பெண்களுக்கு தகுந்தாற்போல் மேற்படிப்புகளையும் வேலை



படிப்பகம்

www.padippkam.com



வாய்ப்புகளையும் பெற துணை புரிகின்றது.

தளத்தின் பெயர் : www.brainvisa.com

**மின்னஞ்சல் ஆலோசனைகள்!**

சரியாக மேற்படிப்புகளைப் பெற மட்டுமல்ல, நாம் தேர்ந்தெடுக்கும் முதல் வேலையை







சரியாக தேர்ந்தெடுக்கவும், அதில் சிறந்து விளங்கவும் இலவச ஆலோசனைகள் அளிக்கின்றனர் வல்லுநர்கள்.

நாம் விரும்பும் துறையைத் தேர்ந்தெடுத்து ஆலோசனைப் பகுதியில் குறிப்பிட்டால், மின்னஞ்சல் மூலம் சரியான வேலை வாய்ப்புகளைப் பெற உதவிக் குறிப்புகள் அளிக்கப்படுகின்றன.

தளத்தின் பெயர் : www.sparkingcareers.com

**நேர்முக தேர்வில் மேற்கொள்ள வேண்டியவை**

வேலை வாய்ப்புகளை வழங்கும் தளமாக மட்டுமல்லாமல், ஜாப் சீக்கர் டெவலப்பர் செக்ஷன் (Job Seeker Developer Section) என்ற பகுதியைக் கொண்டுள்ளது இத்தளம். இப்பகுதியில், நேர்முகத் தேர்வில் நடந்து கொள்ள வேண்டியவை, நேரமேலாண்மை, தன் விவரப் பட்டியலை தயார் செய்வது எப்படி போன்ற இன்றியமையாத உதவிக் குறிப்புகளை அளிக்கிறது.

தளத்தின் பெயர் : www.jobstreet.com

**பொருளாதாரம் மற்றும் நிர்வாகத் துறை மாணவர்களுக்கு!**

பொருளாதாரம் மற்றும் நிர்வாகத் துறையில் ஈடுபட விழையும் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய மேற்படிப்புகள், பயிற்சி மையங்கள், கட்டணங்கள், பாடங்களின் விளக்கங்கள் போன்றவற்றை அளிக்கிறது.

ஏஐஎஸ்இசி (AISEC) எனும் படிப்பு மையத்தின் உதவியுடன் பல்வேறு தொழில்நுட்ப பட்ட/ பட்டய மேற்படிப்புகளையும், பயிற்சி மையங்களையும் வரிசைப் படுத்தியுள்ளது இத்தளம்.

தளத்தின் பெயர் : www.aieset.org

**வல்லுநர்களுடன் அரட்டை!**

உலகிலுள்ள நூறு நாடுகளை வரிசைப்படுத்தியுள்ளது. எந்த நாட்டில் எந்தத் துறை தொடர்புடைய படிப்புகள் சிறப்பான பயிற்சிகளுடன் வழங்கப்படுகிறது போன்ற இன்றியமையாத தகவல்களுடன் அரட்டை அறை மற்றும் கலந்துரையாடலுக்கான தனியிடமும் இத்தளத்தில் உள்ளன. வல்லுநர்களின் ஆலோசனைகளை ஆன்லைனில் பெற்று மேற்படிப்புகளை தேர்ந்தெடுக்கலாம்.




தளத்தின் பெயர் : www.studyabroad.com

**ஐரோப்பாவில் மேற்படிப்புகளைப் பெற!**

ஐரோப்பாவிலுள்ள பல்கலைக் கழகங்களை வரிசைப்படுத்தியுள்ளது இத்தளம். பல்கலைக் கழகங்கள் அளிக்கும் பாடத் திட்டங்களும்,



படிப்பகம்

www.padippkam.com

## மேற்படிப்புக்கு வழிகாட்டும் தளங்கள்!

சேரவேண்டிய விதிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பயில உதவிகளையும் செய்கிறது இத்தளம். மேலும் மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு துறை சார்ந்த வல்லுநர்கள் ஆன்லைனில் பதிலளிக்கின்றனர்.

தளத்தின் பெயர் : www.interview.com

**மேலும் சில தளங்கள்**

www.mistertutor.com
www.alltimejobs.com/interviewtips/default.asp
www.dju.com
www.smartforce.com
www.emind.com
www.zeduniv.com
www.openlearningworld.com
www.elementk.co

**விரும்பும் துறையின் புத்தகங்கள்!**

மேற்படிப்புகளுக்கென, துறை சார்ந்த புத்தகங்களை இனி எங்கும் தேடி அலைய வேண்டாம். ஓர் அறிவுப் பெட்டகமாக காட்சியளிக்கிறது. தேடல்பொறி ஒன்றும் உள்ளது. விரும்பும் துறையைக் குறிப்பிட்டு அரிய புத்தகங்களை ஆன்லைனில் படிக்கலாம். தளத்தின்பெயர்: www.libraryspot.com

# இலவச ஆன்லைன் சேமிப்பக இடம்!

ஹார்டு டிஸ்க்கில் ஃபைல்களை சேமிக்க இடம் போதவில்லை- அல்லது ரகசியமாக ஃபைல்கள், டாக்குமென்டுகளை சேமிக்க தனியாக ஓர் இடம் வேண்டும் என்பவர்களுக்கான ஆன்லைன் சேமிப்பகம், www.xdrive.com. இத்தளத்தில் பதிவு செய்து கொண்டு, டாக்குமென்டுகள் அனைத்து வகையான ஃபைல்களையும் சேமிப்பக இடத்தில் பாதுகாப்பாக வைக்கலாம். எளிமையாக நண்பர்கள், அலுவலக பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். இத்தளத்தில் பதிவு செய்து ஃபைல்களை சேமிக்கும் முறைகள், படிப்படியாக...

■ முதலில் www.xdrive.com தளத்தில் நம்மை பதிவு செய்து கொள்ளவேண்டும். இந்த வலை மனையின் இல்லப்பக்கத்திலுள்ள Sign in பட்டனை கிளிக் செய்ததும் எளிமையான, சுருக்கமான விண்ணப்பப் படிவம் தோன்றும். நமது பெயர் இத்தளத்தில் வைத்துக் கொள்ள நமக்கான மின்னஞ்சல் முகவரி, பயனாளர் பெயர், நுழைவுச் சொல் அளிக்க வேண்டும்.

■ பதிவு செய்தபின் பயனாளர் பெயர் நுழைவுச் சொல் அளித்து நமக்கான பக்கத்தைப் பெறலாம். ஆன்லைனில் புகைப்பட ஆல்பமும் வைத்துக் கொள்ள இந்தப் பக்கத்தில் வசதிகள் உள்ளன. இதற்கென உள்ள பிரிவைப் பயன்படுத்திக் கொள்ளலாம். முதலில் ஃபைல்கள் சேமிப்பைப் பார்க்கலாம். இந்தப் பக்கத்தில் Storage என்ற தொடுப்பை கிளிக் செய்யவேண்டும்.

■ பல வகையான ஃபோல்டர்களின் வரிசையுடன் ஒரு பக்கம் தோன்றும். ரகசிய ஃபோல்டர், பகிர்ந்து கொள்ளும் ஃபோல்டர் மற்றும் ஃபைல்களை தற்காலிகமாக வைத்துக் கையாள இரண்டு ஃபோல்டர்களும் இருக்கும். இதற்கு மேல் புதிதாக ஃபோல்டரை உருவாக்க வேண்டுமெனில் New Folder என்ற தொடுப்பை கிளிக் செய்து உருவாக்கிக் கொள்ளலாம்.

■ தேவையான ஃபோல்டரை கிளிக் செய்து, அந்த ஃபோல்டருக்கு பெயர் கொடுக்கலாம். சில வினாடிகளுக்குப் பின், ஃபோல்டர்கள் வரிசையில் நம் பெயரிட்ட நமது ஃபோல்டர் வந்தமரும். வலது மூலையில் உள்ள Sharing என்ற பட்டனைப் பயன்படுத்தி நமது ஃபோல்டருக்கு அக்ஸஸ் செட்டிங்குகளை மாற்றிக் கொள்ளலாம்.

■ இப்போது நமக்கு இரண்டு ஆப்ஷன்கள் அளிக்கப்பட்டிருக்கும். முதலாவது நமக்கான தனிப்பட்ட ஃபோல்டர் (Private Folder). இரண்டு பொதுவான ஃபோல்டர் (Public Folder) தனிப்பட்ட ஃபோல்டரை எவரும் காண இயலாது. நண்பர்கள் எவரும் இத்தளத்தில் வந்து நமக்கான பக்கத்தில் நம் பொதுவான ஃபோல்டரை பார்க்கலாம்.

பொதுவான ஃபோல்டரை நம் நண்பர்கள் காண, சில விதிகளை நிர்ணயிக்கலாம். Advanced Settings என்ற பட்டனை கிளிக் செய்து ஃபோல்டரை பார்க்க அனுமதி பெறும் நண்பர்களது மின்னஞ்சல் முகவரிகளை அளித்து அவர்கள் மட்டும் காணும்படி செய்யலாம். மற்றவர்கள் என்ன முயற்சித்தாலும் காண இயலாது.






படிப்பகம்

www.padippkam.com



# முழுவசதிகளையும் கற்றுத்தருகிறது கூகிள்!

☞நெட்டிசன்

பிடித்த பயனுள்ள வலைமனைகளை பிரவுசரில் ஒரிடத்தில் சேமித்து வைத்து, வேண்டும் நேரங்களில் அவற்றை பார்வையிட உதவுகிறது புக்மார்க் பகுதி. புக்மார்க் வசதியை பயன்படுத்தல் எளிது. பிடித்த வலைமனை உள்ள திரையில் Bookmarks⇨Add book marks கிளிக் செய்தால் போதும். இந்த புக்மார்க் வசதியில் இன்னும் எளிய, சில டிப்ஸ் உங்களுக்காக...

➤ஒரு தொடுப்பில் இருக்கும் வலைமனையை கிளிக் செய்து அந்த பக்கம் திறந்தபின் Bookmarks⇨Add Bookmarksபுக்மார்க் பகுதியில் சேர்க்க வேண்டும். இதற்கு எளிய வழி, தொடுப்பாக உள்ள வலைமனை பெயர் மீது ரைட்கிளிக் செய்து Add bookmark என்ற சொல்லை கிளிக் செய்தால்போதும். பின் நேரம் கிடைக்கும் போது பொறுமையாக நம் புக்மார்க் பகுதிக்குச் சென்று வலைமனையை பார்வையிடலாம்.

➤புக்மார்க்கில் இணைத்த வலைமனைகள் சரி, அண்மையில் பார்வையிட்ட, புக் மார்க்கிலிருந்து அழித்த வலைமனைகள் அனைத்தையும் பார்வையிட வேண்டுமானால்?... View⇨By Most visited என்பதை கிளிக் செய்யவும். (பார்க்க படம்-1) அண்மையில் பார்வையிட்ட, சேமித்த, அழித்த வலைமனைகள் அனைத்தும் நம் பார்வைக்கு வரும்.




➤கடைசியாக புக்மார்க் பகுதியில் இணைத்த வலைமனையை திறந்து படம்-1 பார்க்க வேண்டும். இதற்கு புக்மார்க் சென்று வலைமனையை தேட வேண்டாம். View⇨Update book marks என்பதை கிளிக் செய்து, கடைசியாக இணைத்த வலைமனையை பார்வையிடலாம்.

➤அனிமேஷன், கிராஃபிக்ஸ் மல்ட்டி மீடியா வகையறாக்கள் நிறைந்த வலைப் பக்கங்களை இன்டர்நெட் ஆப்ஷன் மூலம் போன்ற வற்றை நீக்கிவிட்டு பதிவிறக்கி இருப்போம். இருந்தும் சில பாப்அப் விளம்பரங்கள் வலைமனையில் இருந்து கொண்டு உயிரை வாங்கும். இவற்றையும் எளிதாக நீக்கலாம்.

நெட்ஸ்கேப்பில் Edit ⇨Preference ⇨Advanced தேர்வு செய்து மல்ட்டி மீடியா அப்ளிகேஷன்களை (ஜாவா உட்பட) நீக்கிவிடலாம். இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் Tools⇨Internet Options தேர்வு செய்து ஜாவா உட்பட அனைத்து மல்ட்டி மீடியா அப்ளிகேஷன்கள் முன் உள்ள டிக் குறியை எடுத்து விடவும். (படம்-2)

படம்-2




## விதவிதமான வண்ணமயமான மெசஞ்சர்தோற்றம்!

➤யாஹூமெசஞ்சர் பயன்படுத்துபவர்கள் இனி விதவிதமாய், வண்ணமயமாக மெசஞ்சர் தோற்றத்தை மாற்றிக் கொள்ளலாம். www.messenger.yahoo.com/messenger/help/themes.html சென்று விதவிதமான தோற்றங்களை மெசெஞ்சருக்காக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## கூகிள் தளத்தை முழுமையாக பயன்படுத்த!

தேடல் பொறிகளில் முன்னணியிலும், இணையப் பயனாளர்களின் நண்பனாகவும் திகழும் கூகிள் தளத்தின் முழு வசதிகளையும் சரியாக, முழுமையாக தகவல்கள் தேடுவதிலும், நம்மில் பலருக்கு குழப்பங்கள் மிகுந்துள்ளன.

www.lib.berkeley.edu/teachinglib/guides/internet/google.htm தளம் கூகிளை அக்கு வேறு ஆணி வேராக நமக்கு கற்றுத் தருகிறது. அடிப்படைத் தேடலிலிருந்து மேம்பட்ட தேடல்கள் தேடிப் பெறுவது வரை அனைத்து உதவிக் குறிப்புகளையும் எளிமையாக கற்றுத் தருகிறது.

## எச்டிஎம்எல் கற்கலாம்!

எச்டிஎம்எல் கற்றுக் கொண்டிருப்போருக்கும், கற்றுத் தேர்ந்தோருக்கும் பல யுக்திகள், உதவிக் குறிப்புகள், எளிமையான புதிய கூறுகளை கற்றுத்தருகிறது www.htmlgoodies.com. இலவசமாக எச்டிஎம்எல் டிப்ஸ் கற்று வல்லுநராகலாம். ●



படிப்பகம்

# நெட்ஸ்கேப்பில் எழுத்துருக்களை மாற்றி பிரின்ட் எடுக்க!

-பிரேம்குமார்

நான் நெட்ஸ்கேப் கம்ப்யூனிகேட்டரை பயன்படுத்துகிறேன். அதிலிருந்து பக்கங்களை பிரின்ட் அவுட் எடுக்கும்போது, ஒரே மாதிரியான எழுத்துருக்கள் கண்களை உறுத்துவதாகவும் பெரியதாகவும் உள்ளன. நாமாக எழுத்துருக்களை மாற்றி பிரின்ட் எடுக்கமுடியுமா?

-கே. நசீர், பேர்ணாம்பட்டு.

கம்யூனிகேட்டரில் பிரின்ட் எடுக்கும் பக்கங்கள் அனைத்திலும் ஒரே எழுத்துருக்கள், அளவுகள் தான் இருக்கும். இதற்காக எனக்கு ஃபான்ட் பிடிக்கவில்லை, மாற்று! என கம்யூனிகேட்டரிடம் சொல்லவும் முடியாது! ஆனால் எழுத்துருக்களில் நாமாக சில மாற்றங்களை செய்யலாம்.

இதற்கு Edit⇨ Preferences⇨ Appearance சென்று Fonts என்பதை கிளிக் செய்யவும். பின் எழுத்துருக்களின் அளவுகளை சற்றுக் குறைத்துக் கொள்ளலாம். அதேபோல் வேறு எழுத்துருக்களையும் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் ஒரே நேரத்தில் எழுத்துருக்களின் அளவையும், வடிவத்தையும் மாற்ற இயலாது.

ஒரு தொடுப்பு, அல்லது வலைப் பக்கத்திலிருக்கும் மின்னஞ்சல் முகவரியை கிளிக் செய்தவுடன், அவுட்லுக் எக்ஸ்பிரஸின் மின்னஞ்சல் அனுப்பும் திரை உடனே தோன்றும், அந்த முகவரியுடன். இது இயற்கை. ஆனால் என்கதை வேறு மாதிரியுள்ளது. குறிப்பிட்ட முகவரியை கிளிக் செய்தவுடன், அவுட்லுக் எக்ஸிபிரஸ் திறக்கிறது. பின் நான் கம்போஸ் கிளிக் செய்து பல சம்பிராதயங்களுக்குப் பிறகுதான் மின்னஞ்சல் அனுப்ப முடிகிறது. எனக்கு மட்டும் ஏன் இப்படி?

-வி.என்.கிருபாநிதி, சென்னை-20.

உங்கள் ஆதங்கம் புரிகிறது. நீங்கள் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் இன்ஸ்டால் செய்யும்போது, டீஃபால்ட் இமெயில் புரோகிராமாக கான்பிகர் செய்திருக்காது. (தமிழ்ப்படுத்தாததற்கு மன்னிக்க! தமிழைப் 'படுத்தாமல்' இருக்க வேறு வழி தெரியவில்லை) இதை உறுதி செய்து கொள்ள tools⇨ Options சென்று, General tab-ஐ தேர்ந்தெடுக்கவும். அங்கே கடைசியாக "This application is Not the default mail handler" என்ற சொல் கட்டாயம்இருக்கும்.

இதற்கு அருகில் உள்ள "Make default" என்ற சொல்லை கிளிக் செய்து விடுங்கள். இனி முகவரிகளை கிளிக் செய்தவுடன் அவுட்லுக்கிலுள்ள கம்போஸ் பக்கம் தோன்றும். Make default பட்டன் இயக்கத்தில் இல்லாமல் (disable) இருந்தாலோ, அல்லது சிக்கல் தீர்க்க முடியவில்லை என்றாலோ இன்னும் சில வேலைகளைச் செய்ய வேண்டியதிருக்கும்.

அவுட்லுக் எக்ஸ்பிரஸை அன் இன்ஸ்டால் செய்து பின் ரி இன்ஸ்டால் செய்ய வேண்டும். ரெஜிஸ்ட்ரியில் நல்ல அனுபவம் உள்ளதென்றால், இங்கு சில வேலைகளைச் செய்யலாம். ஆனால் முழுமையாக ரெஜிஸ்ட்ரி பற்றி அறியாமல் கை வைத்து கணிப்பொறியின் இயக்கத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

அப்போது ரெஜிஸ்ட்ரி பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டாமா? நாங்களும் எப்போது ரெஜிஸ்ட்ரி பற்றி அறிவது என முறைப்பவர்களுக்கு, www.regedit.com தளம் சென்று முழுமையாக அறியவும். Start ⇨Run தேர்வு செய்து, Regedit டைப் செய்யவும். பின்HKEY_Classes_Root\mailto\shell\Open\Command இயக்கி, அதில் உள்ள மதிப்பை டபுள்-கிளிக் செய்யவும். (மதிப்பு தன்னிச்சையாக அங்கே இருக்கும்?) C:\Program files\Outlookexpress\MSIMN.Exe \mailurl:%1 என படிக்கும் (பார்க்க படம்-1) ஃபைல் உள்ள இடம் மட்டும் (File path) உங்கள் கணிப்பொறியில் மாறியிருக்கலாம். regedit-ஐ மூடிவிடுங்கள். இப்போது தொடுப்புகளில் மின்னஞ்சல்

படம்-1



www.padippkam.com



முகவரியை கிளிக் செய்தவுடன் மின்னஞ்சல் அனுப்பும் பக்கம் தோன்றும்.

ஆன்லைனிலிருந்து ஒரு ஜிஃப் (.zip) ஃபைலை பதிவிறக்கம் செய்தேன். வழக்கம்போல "Open file from current location/save file to disk" என்ற திரை தோன்றியது. தவறுதலாக திரையிலுள்ள 'always ask before saving this file type' என்ற சொல்லுக்கு முன் உள்ள கட்டத்தை எடுத்து விட்டேன் (Uncheck). இப்போது ஜிஃப் ஃபைல்களை பதிவிறக்கம் செய்து சேமிக்க முடியவில்லை. என்ன செய்வது?

-ஜே.எம்.வீணா, நாகர்கோவில்.

கவலை கொள்ள வேண்டாம். தவறுகள் மனித இயல்பு. தவறுகளை தவறில்லாமல் ஏற்றுக் கொள்வது கணினியின் இயல்பு. (அடடா!)

இச்சிக்கலை எளிமையாக கையாளலாம். விண்டோஸ் எக்ஸ்புளோரர் திறந்து Tools ⇨Folder ஆப்ஷனை தேர்ந்தெடுக்கவும். அதில் ஃபைல் டைப் டேபை கிளிக் செய்து, வரிசையில் உள்ள வின் ஜிஃப் ஃபைலை தேர்வு செய்யவும். பின் Edit பட்டனை கிளிக் செய்யவும். அங்கே Confirm open after download என்ற சொல்லுக்கு முன் டிக் குறியிட்டு பின் Ok கொடுக்கவும். இப்போது ஜிஃப் ஃபைல் பதிவிறக்கம் ஆனவுடன் வழக்கமாக தோன்றும் திரை தடங்கலின்றி தோன்றும். (பார்க்க படம்-2)




படம்-2

நான் டயல் அப் இணைப்பு வைத்துள்ளேன். எனவே வலைப்பக்கங்களை முதலில் பதிவிறக்கி விட்டு, பின் ஆஃப்லைனில் அவற்றை பார்ப்பேன். சில வலைப்பக்கங்களை பதிவிறக்கம் செய்யும் போது எந்த தடங்கலும் இல்லாமல் பதிவிறக்கம் ஆகிறது. ஆனால் அவற்றை திறந்தால் வெறும் பக்கமாகவே உள்ளது. இது எதனால்? முழுமையாக அனைத்து கூறுகளையும் கொண்ட வலைப் பக்கத்தை பதிவிறக்கம் செய்து பின் பார்க்க இயலுமா?

-கே. பரமசிவம்

paru_vam2002@kanitamil.com

இப்போது உள்ள வலைமனைகள் எச்டிஎம்எல் தவிர ஜாவா, ஜாவா ஸ்கிரிப்ட், ஃப்ளாஷ் போன்ற மேம்பட்ட தொழில் நுட்பங்களை அதிகம் பயன்படுத்துகின்றன. ஒரே ஒரு சிறிய ஃபைல் சேவ் கமாண்டில் இவை அனைத்தையும் பதிவிறக்கி விட முடியாது. எனவே தான் நீங்கள் பதிவிறக்கிய பக்கங்கள் பல வெறுமையுடன் உள்ளது. ஆனால் இதற்கு எளிய மாற்று வழி உண்டு.

டெலி புரோ (Telepro) என்ற யுட்டிலிட்டி கொண்டு முழுமையாக ஒரு வலைமனையை பதிவிறக்கி ஆஃப்லைனில் காணலாம். இந்த யுட்டிலிட்டி www.tenmax.com/teleport/pro/home.htm என்ற தளத்தில் உள்ளது. இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம்.




எனது இன்பாக்ஸ் பகுதிக்கு வரும் மின்னஞ்சல்களை நார்ட்டான் ஆன்டி வைரஸ் 2000 கொண்டு ஸ்கேன் செய்தபின் திறந்து பார்ப்பேன். ஆனால் ஸ்கேன் செய்யும்போது அந்த மின்னஞ்சல்களின் மெயில் சர்வர் முகவரிகள் சைமான்டெக் (Symantec) சர்வருக்கு மாறிவிடுகிறது.



படிப்பகம்

www.padippkam.com



இதனால் என்னால் மின்னஞ்சல்களை படிக்க முடிவதில்லை. இதற்கு என்ன வழி.

-ப. முகைதீன்,
pm_deen2003@kanitamil.com

நார்ட்டான் ஆன்டிவைரஸ் 2000 கொண்டு ஸ்கேன் செய்யப்படும் மின்னஞ்சல்களின் சர்வர் முகவரி சைமான்டெக் சர்வருக்கு மாற்றத்தான் செய்யும். இதற்கு சைமான்டெக் சர்வர் வலைமனைக்குச் சென்று சிக்கலுக்கான தீர்வைப் பெறலாம்.

வலைமனையின் முகவரி, www.service/symantec.com/support/ சிக்கல்களுக்கு தீர்வுகள் கண்டுபிடிக்க சிரமம் இருந்தால் நார்ட்டான் ஆன்டி வைரஸ் 2002 நிறுவி விடுங்கள்.

அல்லது இதற்கு இணையான ஏவிஜி (AVG) ஆன்டி வைரஸ் மென்பொருளை நிறுவிக் கொள்ளலாம். www.grisoft.com என்ற வலைமனையில் ஏவிஜி ஆன்ட்டி வைரஸ் மென்பொருள் இலவசமாக கிடைக்கின்றது.

ஆன்லைனில் ஸ்போக்கன் இங்கிலீஷ் கோர்ஸ் இலவசமாக நடத்தும் வலைமனைகளின் பெயர்களை தந்தால் பேருதவியாக இருக்கும்.




-சாய்ராம்,
sairam_1@hotmial.com

அமர்ந்த இடத்திலிருந்தே ஆங்கிலம் மட்டுமல்ல உலகில் பெருவாரியாக பேசப்படும் மொழிகளை கற்கலாம், இலவசமாக. உங்களுக்காக அந்த வலைமனைகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் இந்த இதழில் அளித்துள்ளோம். (‘தோமாரியாத்தோ’ - உங்கள் புண்ணியத்தில் நானும் இப்போது *ஜப்பானிய மொழி கற்றுக் கொண்டேன்.)*

ஒரு முழு இணைய பக்கத்தை முழுவதும் ஒரே நேரத்தில் ஃபிளாப்பியில் காப்பி செய்வது எப்படி? (links எல்லாம் சேர்த்து)

-எம். ஜோதிகுமார்,
135எப், மதுரை ரோடு,
தென்காசி-627 811.

எளிமையாக ஃபிளாப்பியில் காப்பி செய்யலாம். இதுபோன்ற ஏராளமான கேள்விகளுக்கு முன்னரே பதிலளித்து விட்டாயிற்று. (முந்தைய இதழ்களை படியுங்கள் என கடுப்படிக்க மாட்டோம்) வலைப்பக்கத்தை திறந்து கொண்டு File⇨Saveas செல்லுங்கள்.

கணிப்பொறியின் அனைத்து டிரைவுகளையும் கொண்ட திரை தோன்றும். அதில் ஃபிளாப்பியை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். பின் Save as கொடுக்க, பக்கம் ஃபிளாப்பிக்கு பதிவிறக்கத் தொடங்கும் பதிவிறக்கம் முடித்தபின் ஃபிளாப்பி டிரைவ் சென்று பார்க்க.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் ஐகானாக அந்த ஃபைல் சேமிக்கப்பட்டிருக்கும். அதை கிளிக் செய்து திறக்க, ஆன்லைனில் நாம் பார்த்த வலைப்பக்கம் தொடுப்புகளுடன் அப்படியே சேவ் ஆகியிருக்கும் அந்த ஐகான் அருகில் ஃபோல்டர் ஒன்றும் சேர்ந்து சேமிக்கப்பட்டிருக்கும். இதில் அந்த வலைப்பக்கத்திலுள்ள படங்கள் (Jpeg) தனியாக சேமிக்கப்பட்டிருக்கும். ●

## ஆன்லைனில் கிரடிட் கார்டு முறைகேடுகளை தடுக்க!

கிரடிட் கார்டு திருட்டு, ஏடிஎம்-ல் போலி கிரடிட் கார்டு அளித்து பல லட்சம் கொள்ளை போன்ற செய்திகள் இப்போது அதிகமாகி வருகின்றன. ஆன்லைனிலும் இதே நிலை. ஆனால் வெளியில் தெரியாத அளவுக்கு கிரடிட் கார்டு முறைகேடுகள் அன்றாடம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. சைபர் சட்டங்களின் தலையீடுகள், செயல்பாடுகள் இல்லமையால் ஆன்லைனில் கிரடிட் கார்டு முறைகேடுகள் பெருகிக் கொண்டே போகின்றன.

ஒரு வலைமனைக்கு அளிக்கும் நமது கிரடிட் கார்டு எண், ரகசிய எண்களை துரத்திப் பிடித்து முறைகேடுகள் செய்கின்றனர். இவற்றை தடுக்கவே முடியாதா? உஷாராக இருக்க என்ன வழி என கேட்பவர்கள், www.prig.org/calprig/consumer/privacy/index.htm, consumer.gov/indtheft/, ckfraud.org/identify.html போன்ற வலைமனைகளை வழிகாட்டியாக வைத்துக் கொள்ளலாம்.

ஆன்லைனில் கிரடிட் கார்டுகளை எப்படி திருடுகிறார்கள், கிரடிட் கார்டுகளை பிறருக்கு அளிக்கும் போது மேற்கொள்ள வேண்டியவை, போன்ற விவரங்கள் முன்னெச்சரிக்கை ஆலோசனைகள் அளிக்கப்பட்டுள்ளன.

-தீப்தி



படிப்பகம்

www.padippkam.com



# அமெரிக்காவுக்கு எதிரான புதிய வைரஸ்!

நவீனா

கடந்த ஒரு வாரமாக பிபிசியும், சிஎன்என்னும் தொடர்ந்து பார்த்திருந்தால் உணர்ந்திருப்பீர்கள். யுத்தம் எவ்வளவு கொடுமையானது என்று. எத்தனை மனித உயிர்கள், யுத்தகளத்தில் அநாதைப் பட்டு நிற்கும் குழந்தைகள். உண்மையில் ஜார்ஜ் புஷ்ஷின் எண்ணெய் பசிக்காக நடத்தப்படும் இந்த யுத்தத்தில் பெரும்பாலும் கேடயங்களாக பலியாவது அப்பாவி பெண்களும், குழந்தைகளும்தான். www.nowar.org தளம் உலகம் முழுவதும் உள்ள மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி வருகிறது. கலந்து கொண்டு போருக்கு எதிரான உங்கள் வாக்குகளை கொஞ்சம் அழுத்தியே பதிவு செய்யுங்கள்.



(பிகு) அமெரிக்கா நடத்தும் இந்த போரில், அமெரிக்க படைகளுக்கான செலவில் 5 சதவீதத்தை செலவு செய்தாலே போதும். உலகிலுள்ள மொத்த ஏழ்மையை ஒழித்து விடலாம் என்று புள்ளி விவரம் கூறுகிறது. ஐநா சபையும் இந்த கசப்பான உண்மையை ஒத்துக் கொள்கிறது.

இந்த மாதம் கோடானு கோடி இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் புண்ணியத்தை வாங்கி கட்டிக் கொண்ட தளங்கள் rediff.com, sify.com குறிப்பாக செஞ்சூரியினில் நடந்த இந்தியா vs பாகிஸ்தான் போட்டியின் ஸ்கோர் நிலவரங்களை இத்தளம் உடனுக்குடன் ஒலிபரப்பியது.




அமெரிக்காவுக்கு எதிராக யுத்தம் தொடங்க இணைய தீவிரவாதிகள் இறங்கியுள்ளனர். மலேசிய நாட்டில் வசிக்கும் மெல் ஹாக்கர் என்பவர் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அதில், ஈராக்கை அமெரிக்கா கைப்பற்றினால் அமெரிக்க கம்ப்யூட்டர்களை செயலிழக்கும் ஒரு அதிபயங்கர வைரஸை பரப்பி விடுவேன். ஏற்கனவே பின்லேடன் எனும் பெயரில் என்னிடம் பயங்கர வைரஸ் புரோர்கிராம் உள்ளது. இதை இ- மெயிலில் பரப்பி விட்டால், அமெரிக்க சர்வர்கள் மிக கடுமையான பாதிப்புகளை சந்திக்கும் என்கிறார். சபாஷ் சரியான போட்டி.

## நாமே பயர்வாலை உருவாக்கலாம்!

நமது கணிப்பொறிக்கு தேவையில்லாமல் வரும் தகவல்கள், டாக்குமெண்டுகளை கண்காணித்து தீயவைகளாக இருப்பின் தடுக்கும் பணியை செய்கிறது ஃபயர்வால் (Firewall) இணையத்தின் பாதுகாப்புக்கு பெரும் பங்கு வகிக்கும் இந்த ஃபயர்வாலை நாமே நம் கணிப்பொறியில் நிறுவி பாதுகாக்கலாம். www.zonelabs.com என்ற வலைமனையில் இருந்து இலவசமாக இந்த வசதியைப் பெறலாம்.




நமது டாஸ்க்பாரில் நிறுவிக்கொள்ளும் வகையில் எளிமையான படிப்படியான வழிமுறைகளையும் கொண்டுள்ளது. ட்ரோஜான்களிடம் இருந்து காக்கும் வசதியையும், மின்னஞ்சல்கள், அரட்டையடிக்கும் போது பரிமாறப்படும் ஃபைல்களை கண்காணித்து, தேவையற்றவைகளை தடுத்து திருப்பி அனுப்பி விடுகிறது.



படிப்பகம்




# இன்றே சந்தா செலுத்தி விடுங்கள்!




**ஓர் ஆண்டு சந்தா ரூ. 110 இரண்டு ஆண்டு சந்தா ரூ. 210**

**வெளிநாடு (AIRMAIL) ரூ. 650**

**இணையத்தின் மூலம் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார மேம்பாடுகளை மனிதன் அடைகிறான். இணையத்தின் பயன்பாட்டை தமிழர்களின் விரல் நுனிக்குக் கொண்டு வரும் ஒரே இதழ் இன்டர்நெட் உலகம்தான்! ஒவ்வொரு இதழும் ஒரு தகவல் களஞ்சியமாக வெளிவருகிறது. இணையம் பற்றி எளிமையாக சொல்லும் இன்டர்நெட் உலகம் உங்கள் வீடு தேடி வர இன்றே சந்தாவைச் செலுத்தி விடுங்கள். படிவத்தை உடனே நிறைவு செய்து கணித்தமிழ் மீடியா (KANITAMIL MEDIA) என்ற பெயருக்கு டிடி (DD) எடுத்து அனுப்பி வைக்கவும்.**

அனுப்ப வேண்டிய முகவரி

## கணித்தமிழ் மீடியா

புதிய எண், 60, இரண்டாவது தளம், மாடல் ஸ்கூல் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006.

## இன்டர்நெட் உலகம் சந்தா படிவம்

சந்தா அனுப்புபவரின் பெயர் : ..............................

முகவரி ..............................

..............................

..............................

அ.கு. எண் : ..............................

அனுப்பப்படும் தொகை : .............................. உங்கள் தொலைபேசி எண் : ..............................

வங்கியின் பெயர் : ..............................

தேதி : .............................. டி.டி எண் : ..............................

www.padippkam.com



# டிஜிட்டல் கையொப்ப வசதியைப் பெற...

☞ ஏ.பி.கே

டிஜிட்டல் ஐடி அல்லது சிக்னேசர் (Signature) என்பது நாம் காசோலைகள் அல்லது டாக்குமென்டுகளில் போடும் கையெழுத்து அல்ல. நமக்கான, நம் நிலையை செய்தி அனுப்புவோர்க்கு தெரியப்படுத்த உதவும் குறுஞ்செய்தி. எடுத்துக்காட்டாக நாம் அனுப்பும் அனைத்து செய்திகளுடன், 'வாழ்க வளமுடன்', 'விரைவில் பதில் அனுப்ப' போன்ற செய்திகளை தன்னிச்சையாக இடம்பெற வைக்கலாம்.

அவுட்லுக் எக்ஸ்பிரஸ் பயன்படுத்தி அனுப்பும் அனைத்து மின்னஞ்சல்களுடன் கூடவே தன்னிச்சையாகச் செல்லும் டிஜிட்டல் கையொப்பங்களை இட்டு அனுப்பலாம். டிஜிட்டல் ஐடி எனும் இந்த வசதியைப் பயன்படுத்தி டிஜிட்டல் கையொப்பங்கள் இட...

அவுட்லுக் எக்ஸ்பிரஸ் திறந்து அதில் Tools⇨Options⇨Security கிளிக் செய்யவும். அங்கே Get Digital id என்ற பட்டனை தேர்ந்தெடுக்கவும். (இந்நேரத்தில் இணைய இணைப்பு இருத்தல் அவசியம்)

இந்த பட்டனை கிளிக் செய்தவுடன் www.verisign.com தளம் தன்னிச்சையாக திறக்கும். இந்த தளம் டிஜிட்டல் ஐடிக்கள் மற்றும் மின்னஞ்சல் பயன்பாடுகளுக்கென பாதுகாப்பு வசதிகளிலிருந்து மேம்பட்ட வலைமனை பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் வரை எளிமையாக்கி வழங்குகிறது, இலவசமாக! இந்தத் தளத்தின் இல்லப்பக்கம் தோன்றியவுடன் அப்பக்கத்திலுள்ள Personal Id's என்ற சொல்லை கிளிக் செய்யவும்.

அடுத்து வரும் பக்கத்தில், நமது சொந்த விவரங்களைக் கேட்கும். பெயர், மின்னஞ்சல் முகவரி, பிறந்த தேதி, அஞ்சல் குறியீட்டு எண்ணைக் கொடுக்கவும். இலவசம் மற்றும் பணம் செலுத்தி பெறும் வசதிகள் என இரு பகுதிகள் இருக்கும். இவற்றில் இலவசத்தை கிளிக் செய்யவும்.







சிறிது நேரத்துக்குப் பின், வெரிசைன் தளத்தில் நாம் அளித்த மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் வந்திருக்கும். அதில் ஒரு வலைமனையின் பெயரும் கூடவே ஒரு ரகசிய எண் (Pin Number) அளிக்கப்பட்டிருக்கும்.

அந்த வலைப்பக்க தொகுப்பை கிளிக் செய்யவும். வலைப்பக்கம் தோன்றும். அதில் கேட்கும் இடத்தில் நமக்கு மின்னஞ்சலில் வந்த ரகசிய எண்ணை அளிக்கவும். இதைத் தொடர்ந்து அடுத்து ஒரு பக்கம் தோன்றும். அப்பக்கத்தில் உள்ள Install பட்டனை கிளிக் செய்யவும். நமது கம்ப்யூட்டருக்கு டிஜிட்டல் ஐடி இன்ஸ்டால் ஆகத் தொடங்கும்.

இன்ஸ்டால் ஆனவுடன் அவுட்லுக் எக்ஸ்பிரஸில் Tools ⇨Options⇨Security⇨digital ID தேர்ந்தெடுக்கவும். அடுத்து வரும் திரையில் Sign பட்டனைஅழுத்தி நமக்கான கையொப்பத்தை (சிறிய செய்தியை) டைப் செய்து, அதை நாம் அனுப்பும் அனைத்து செய்திகளுடன் அனுப்பலாம்.

அவுட்லுக் எக்ஸ்பிரஸில் ஒரு செய்தியை தேர்வு செய்து கொண்டிருக்கும் போதே, செய்தி திறந்து விடும்.. இச்செயல் பிடிக்க வில்லையெனில், View⇨Layout தேர்வு செய்து Preview pane இயக்கத்தை நிறுத்தி விடுங்கள்.





படிப்பகம்

# மோசமானவை, ஆனால்?

✍ வெட்டிவேலன்

சில வலைமனைகள் பாது காத்து பயன்படுத்தக் கூடிய தாகவும். சில வலைமனைகள் ரசிக்கக் கூடியதாகவும் இருக் கும். ஆனால் எந்த வகையி லுமே சேராத, என்ன நோக் கத்துக்கென்றே தெரியாத சில வலைமனைகளும் உலவுகின் றன. பயனற்றவைதான்! ஆனால் இவற்றையும் பொருட்டாக மதித்து பார்வையிட்டால், சில சுவாரஸ்யங்களையும், அரிய தகவல்களையும் அறிந்து கொள்ளலாம். நேரமிருந்தால் (வேலைகள் இல்லாதபோது) இத்தளங்களுக்கு விசிட் அடிக்கலாம்.



## 4.3 மில்லியன் பயனற்ற செய்திகள்!

1994ம் ஆண்டு தொடங்கப் பட்ட இத்தளத்தில் தேவை யற்ற, பயனில்லாத செய்திகள் குவிந் துள்ளன. ஆனால் சுவாரஸ்யமான செய்திகள். சிறிய எடுத்துக்காட்டு, டயானா இறந்த போது அவர் காரின் ஹெட்லைட் ஆஃப் ஆகி ஆஃப் ஆகி அணைந்ததா? இல்லையா? என கேள்விகள் கேட்டு விளக்கமளித்துள்ளனர். வாக்கியத்தை மீண்டும் படித்து அர்த்தம் புரிந்து கொள்ளவும். இதுபோல் தளத்தில் உள்ள செய்திகள் தேவையில்லாமல் இருந் தாலும் சுவாரஸ்யத்திற்கு பஞ்ச மில்லை. 4.3 மில்லியன் செய்தி களைக் கொண்டுள்ள இத்தளம், பயனற்ற பல வலைப்பக்கங்களின் தொடுப்புகளையும் கொண்டுள் ளது. தளத்தின் பெயர் : www.go2net.com/users




## செய்திகளை நக்கலடித்து மொக்கை போடுகிறது!

நம் பொறுமையின் எல்லையை கணக்கிடுகிறது இத்தளம். அந்தளவுக்கு செய்தி களின் நீளம் நம்மை எரிச்சலூட்டும். ஒரு சாதாரண தகவல் அல்லது செய்தியை எடுத்துக் கொண்டு அதன் நதி மூலம் ரிஷி மூலத்தை ஆராய்ந்து மொக்கை போடுகிறது. ஆனால் செய்திகளின் நடுநடுவே அச்செய்தியை நக்கலடித்திருப்பது ஹைலைட். இதற்காகவே செய்திகளை ஊன்றி படிக்கத் தூண்டுகிறது. பழைய நெட் ஜோக்குகளை தொகுத்தளிக்கிறது.

தளத்தின் பெயர் : www.worstoftheweb.com

## குமுதம், விகடன்காரர்கள் படிக்க வேண்டிய தலையங்கம்!

தத்துவஞானிகள், பெரி யோர்களின் பொன்மொழி களை எடுத்துக் கொண்டு, அவற்றை எப்படியெல்லாம் நையாண்டித்தனம் செய்ய முடியுமோ அந்தளவுக்கு நம்மை சிரிக்கவும் வைக்கிறது. கோபம் கொள்ளாமல் பொன்மொழிகளின் உருமாற்றத்தை, கிண்டலை ரசிக்க முடியுமானால் இத்தளம் அருமை யான பொழுதுபோக்கு களம்.

குறிப்பாக தளத்தில் ஆசிரியர் குழு அளிக்கும் தலையங்கத்தை கண்டிப்பாக குமுதம், விகடன் குழுமத்தினர் படிக்க வேண்டும். அவ்வளவு கிண்டல், நக்கல். இதுபோன்ற வலைமனைகளின் தொடுப்புகளையும் கொண்டுள்ளது.

தளத்தின் பெயர் : www.webworst.miningo.com/entertainment/webworst.

## மானிட்டரை உடைத்தால் தளம் பொறுப்பல்ல!

வெறுப்பு, குரோதம், அவமானம், கோபம், அழுகை இந்த ஐந்து குணங்களை மையப்படுத்தி

www.padippkam.com



உருவாக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக இந்த ஐந்தையும் தளத்தின் தகவல்கள் நமக்குத் தரும். அந்தளவுக்கு தகவல்கள் கடுப்படிக்கின்றன. எனினும் பொறுமை காத்து அமைதியாக பார்வையிட்டால் நமது மனம் அமைதியடைந்து, உலக பற்றுகளிலிருந்து விடுபடும். அப்படியொரு சிறந்த பயிற்சியளிக்கிறது.




பொறுமையிழந்து மானிட்டரை உடைத்து விட்டு பிரவுசிங் சென்டர்காரர்களிடம் உதை வாங்கினால் நாங்கள் பொறுப்பல்ல என முன்னெச்சரிக்கை செய்கிறது இத்தளம். தளத்தின் பெயர் :www.cruel.com

## கனவில் இம்சை தரும் எழுத்துருக்கள்!

ஒரு வலைமனையை எப்படியெல்லாம் வடிவமைக்கக் கூடாதோ அப்படியெல்லாம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இல்லப்பக்கத்தின் வண்ணங்களைப் பார்த்தால் கண்கள் அவிந்து விடும்.

எழுத்துருக்களின் வடிவம், வண்ணம், இரவில் நம் கனவில் வந்து இம்சை கொடுக்கும். அந்தளவுக்கு 'அழகாக' வடிவமைத்துள்ளனர்.

தகவல்களைப் படித்துக் கொண்டிருக்கும்போது தேவையில்லாமல் நுழையும் அனிமேஷன், எஃபெக்டுகள் எரிச்சலையடையச் செய்தாலும் தகவல்களிலிருந்து நம்மை காப்பாற்றிய புண்ணியத்தை கட்டிக் கொள்கின்றன.

எப்படியாயினும் ஒரு நல்ல வலைமனையை வடிவமைக்க இத்தளமும் உதவி செய்கிறது. அதுசரி!

அப்படி என்னதான் தகவல்கள் வைத்துள்ளனர், என்பவர்களுக்கு, ஒன்றுமில்லை. தளத்தை எப்படி கஷ்டப்பட்டு வடிவமைத்தோம் என்ற வெற்றிக் கதையைச் சொல்கிறார்கள் வடிவமைப்பாளர்கள்.

தளத்தின் பெயர் : www.nttelco.net/worthless ●

இம்மாதம் படித்து விட்டீர்களா?

கம்ப்யூட்டர் உலகம் மாத இதழ்!

- ஆரக்கிள் டிப்ஸ்
- விசுவல்பேசிக் கேள்வி-பதில்!
- மதர்போர்டு : கம்ப்யூட்டரின் சிஸ்டம் பஸ்
- ASP+JSP தொடர்!
- ஹார்டுவேர் கேள்வி-பதில்
- எம்எஸ்வேர்டு டிப்ஸ்!
- ஹார்டுவேர் : தொழில் வாய்ப்புத் தொடர்!
- டாஸ் மோடில் டீஃபிராக் செய்வது எப்படி?

தமிழகமெங்கும் எல்லா கடைகளிலும் கிடைக்கும்!



படிப்பகம்

# வலைப்பக்கத்தை எளிமையாக பதிவேற்ற!

- குமரன்

எளிமையாக நாம் வடிவமைத்த வலைப்பக்கங்கள், வலைமனைகளை பதிவேற்ற (அப்லோடு), விண்டோஸ் 98 வெப் பப்ளிஷிங் விசார்டு (Web Publishing Wizard) என்ற வசதியைக் கொண்டுள்ளது. இதன் மூலம், நாமே எளிமையாக, விரைவாக இணையத்தில் நமது வலைப் பக்கத்தை பதிவேற்றம் செய்யலாம். இதற்கு...



விண்டோஸ் 98 நிறுவப்படும் போதே, இந்த வெப் பப்ளிஷிங் விசார்டும் கண்டிப்பாக சேர்ந்து நிறுவப்பட்டுவிடும். Start மெனுவில் Accessories⇨Internet Tools சென்று இந்த விசார்டைப் பெறலாம். ஆனால் அங்கே இந்த வசதி இல்லையெனில், மீண்டும் விண்98 சிடி கொண்டு நிறுவலாம்.




இதற்கு சிடியை டிரைவில் செலுத்தி, கன்ட்ரோல் பேனல் சென்று AddPrograms⇨Windows Setup சென்று, அங்கே Internet toolsல் இருந்து இந்த வசதியை பெற்றுக் கொள்ளலாம்.

வெப் பப்ளிஷிங் விசார்டு ஆப்ஷனை கிளிக் செய்தவுடன் தோன்றும் டயலாக் பாக்ஸில் உள்ளவற்றை கவனமாக படித்துவிட்டு Next பட்டனை கிளிக் செய்யவும்.

அடுத்து தோன்றும் Select file or folder திரையில் Browse folder என்ற பட்டனை கிளிக் செய்யவும். கணிப்பொறியின் அனைத்து டிரைவுகளையும் கொண்ட திரை தோன்றும்.

இவற்றில் நம் வலைப் பக்கத்துக்கான ஃபோல்டரை தேர்வு செய்து Open கொடுக்கவும். அந்த ஃபோல்டர் திரையில் வந்தமரும். அதற்கு முன் இந்தத் திரையில் உள்ள include subfolder என்ற கட்டத்தின் முன் உள்ள பாக்ஸை டிக் (✓) செய்யவும். நம் வலைப்பக்கத்திற்கான அனைத்து துணை ஃபோல்டர் களையும் சேர்த்து பதிவேற்றம் செய்யக் கூடிய முக்கியமான ஆப்ஷன் இது. Next கொடுக்கவும்.

அடுத்து வரும் திரையில் நமது வலைப்பக்கத்துக்கு பெயர் கேட்கும். நம் வலைமனை, வலைப்பக்கத்துக்கு சர்வர் அளித்த டொமைன் பெயரை முழுவதுமாக அளிக்க வேண்டும். (எ-கா www.myownpages.com) அந்த கட்டத்தின் கீழே நாம் ஏற்கனவே தேர்ந்தெடுத்து வைத்துள்ள நம் ஃபோல்டர் கொண்ட கட்டம் தோன்றும்.

பின் Next கொடுக்க, விசார்டானது நமது வலைப் பக்கத்துக்கான சர்வர் சேவைகளை அளிப்போரிடம் தொடர்பு கொள்ளும். (நமது வலைப்பக்கத்தின் பெயர், உங்களுக்கான வலைஇடம் ஒதுக்கப்பட்டுள்ளது சரிதானா? என சோதிக்கும்)

சர்வருடன் தொடர்பு கொண்ட பின் விசார்டு நம்மிடம் நமது பெயர், நுழைவுச் சொல் கேட்கும். வலை இடம் அளிப்போர் நமக்களித்த பெயர், நுழைவுச் சொல் கொடுத்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறலாம்.

அடுத்து வரும் திரையில் உங்கள் இணைப்புக்கான வழி (Connection Method) என்னவென்று கேட்கும். விசார்டு தாமாகவே இந்த கட்டத்தை நிறைவு செய்து விடும். இல்லையெனில் அந்த கட்டத்தில் FTPயை தேர்ந்தெடுத்து Next

www.padippkam.com















கொடுக்கவும்.

அடுத்த திரையில் நமது ஐஎஸ்பியின் எஃப்டிபி சர்வருக்கு பெயர் அளிக்க வேண்டும். (வலைப் பக்கத்துக்கான helpfilesல் இருந்து இதைப் பெறலாம்) Next கொடுக்கவும். அடுத்து வரும் திரையில் Finish கொடுக்க நமது வலைப்பக்கம் பதிவேற்றம் ஆகியிருக்கும்.

நாம் பதிவேற்றிய வலைப்பக்கம் சரியாக பணி புரிகிறதா என சோதிக்க, பிரவுசரை இயக்கி அதில் நமது வலைப்பக்க பெயரை அளித்து (யூஆர்எல்லில்) சோதிக்கவும். அனைத்து தொடுப்புகளும் சரியாக இயங்குகிறதா என கிளிக் செய்து பார்க்கவும்.




அப்லோடு செய்த வலைப்பக்கம் பிரவுசரில் சரியாக இயங்க மறுத்தால், பிரவுசரில் Tools⇨Internet Options⇨Settings சென்று அங்கே Use a Proxy Server என்ற சொல் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

நமது யூஆர்எல் பெயரை சோதித்துக் கொள்ளவும். மேலும், நமது வலைப்பக்கத்திலுள்ள முதன்மை ஃபோல்டரின் பெயர் index.html, home.html அல்லது default.html என்று இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். இவையனைத்தும் மேற்கூறியபடி இல்லையெனில் சரி செய்து விட்டு பின் மீண்டும் வலைப்பக்கத்தை பிரவுசரில் இயக்கி சோதித்துக் கொள்ளலாம். ●

"அம்மா, நான் மேயப் போயிட்டு வர்றேன்..!"
"என்னடா உளர்றே....?"
"பிரவுசிங் போயிட்டு வர்றேன்னு சொல்ல வர்றேம்மா!"
-சி. மணி, புத்தனாம்பட்டி.



படிப்பகம்

www.padippkam.com






வளைகுடா நாடுகளுக்கு பயணமாகவுள்ள அமெரிக்க பயணிகள் விமானம்!



படத்தை உற்று பார்க்கவும். புஷ்ஷின் அதிபுத்திசாலித்தனம், அமெரிக்காவின் மூளை தெரியும்.



பின்லேடனையும், சதாமையும் இந்த வேடத்தில் சென்று மயக்கி பிடித்தால்தான் உண்டு!!



படிப்பகம்

www.padippkam.com





நாய் கூட ஆயுதங்கள் ஒளித்து வைத்திருக்குமோ என்று சோதிக்கும் அமெரிக்க 'போலீஸ்காரர்!'

அடப்பாவி! இறை செய்தி படின்னு சொன்னா, இயேசுநாதரை சிலுவையில் அறைந்தது சதாம் உசேனின் தாத்தான்னு சொல்றானே!?



அடுத்த நாட்டில் என்ன வளம் இருந்தாலும் அதை ஆராயும் எண்ணம்... சிறு வயது புஷ். இன்னும் மாறவேயில்லை.






விரைவில்... இரண்டு சூப்பர் ஸ்டார்கள் கலக்கும் படம்.. உங்கள் அபிமான பதுங்குகுழிகளில்...



படிப்பகம்

www.padippkam.com

# அறிவுப்பாலத்தில் பயணிக்கும் 'நெட்டிசன்'கள்!

இந்த இதழில் அறிவுப் பாலத்தில் தடம் பதித்த கேள்விகளுக்கு வாசகர்கள் பதிலளிக்கலாம்.
கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளிக்கும் வாசகர்களுக்கும் பரிசுகள் உண்டு.

*(சென்ற இதழில் கேட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும்... 29ம் பக்கம்)*

**சி. மணி**
1-81ஏ. மெயின் ரோடு,
புத்தனாம்பட்டி-621 007.
திருச்சி.
cselvamani1307@yahoo.com

கல்வி : பிஎஸ்சி-கம்ப்யூட்டர் சயின்ஸ்

பணி : இன்ஸ்ட்ரக்டர்

ஆர்வம் : தகவல் தொழில்நுட்பம், பிரவுசிங்

கேள்வி : டெஸ்க்டாப்பில் என்னுடைய favourite இணைய முகவரிகளை (Web Site Address) வைத்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு வழிமுறைகள் ஏதாவது இருக்கிறதா? இருந்தால் விரைவில் சொல்லுங்கள்.

**ஆர். ரமேஷ்,**
டிரினிடி அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
டிரினிடி நகர், மோகனூர் ரோடு,
நாமக்கல்.
jagiramesh@rediffmail.com

வயது : 29

கல்வி : எம்காம்., பிஜிடிசிஏ., எம்சிஏ.,

பணி : கம்ப்யூட்டர் சயின்ஸ் டீச்சர்

ஆர்வம் : சிறந்த புரோகிராமராக ஆக வேண்டும்.

கருத்து : நமது நாட்டின் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் இ-மெயில் முகவரி என்ன?
அமெரிக்க வெள்ளை மாளிகையைப் பற்றி தெரிந்து கொள்ள அதன் வலைமனை முகவரி என்ன?

**எல்.ஆர். விஜயகுமார்**
236, ஸ்ரீசக்கரபாணி காம்ப்ளக்ஸ்,
பிடிஆர் மெயின் ரோடு, தேனி-625 531
chan_vig_6003@yahoo.com



வயது : 24

கல்வி : டி.சி.டெக்., பிடிஐடி.,

பணி : சர்வீஸ் இன்ஜினியர்

ஆர்வம் : கணினி, இணையம், தொழில்நுட்பம் சார்ந்த தகவல்களில்

கேள்வி : உலகளாவிய இணையத்தை புளுடூத் (Bluetooth) தொழில்நுட்பத்தின் துணை கொண்டு அவரவர் தொலைக்காட்சியில் பயன்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமே. இருப்பினும் அது எப்போது நடைமுறையில் சாத்தியப்படும்?

**ர. பாஸ்கரன்**
141, பிள்ளையார் கோவில் தெரு,
தோட்டப்பாளையம், வேலூர்-632 004.
visual_dreamsin@yahoo.co.in



வயது : 20

கல்வி : டிசிடி

பணி : மாணவர்

ஆர்வம் : கணினி தகவல் தேடுதல், ஹார்டுவேர், வெப்டிசைனிங் சாஃப்ட்வேர்

கருத்து : நானும், என் நண்பர்களும் இன்டர்நெட் உலகம் இதழை படித்து வருகிறோம். இதுவரை பல வெப் தளங்களை பார்த்தும், உபயோகித்தும் பயன் அடைந்துள்ளோம்.

**என். ஜமுனா,**
2, ஏகேபி கோயில் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-600 015.
jamuna@kanitamil.com

வயது : 23

கல்வி : எம்சிஏ

பணி : கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர்

ஆர்வம் : சாஃப்ட்வேர் புரோகிராம்களை கற்றுக் கொள்வது

கருத்து : தங்களின் இதழில் பல கேள்விகளுக்கு பதில் சொல்லி வருவது அருமை. இன்டர்நெட்டில் இன்னும் ஏராளமான செய்திகள் கொட்டிக் கிடக்கின்றன. அவைகளையெல்லாம் வெளியிடலாமே?

**என். சாரதி**
ஜகதீஸ்வரன் ஸ்டோர்ஸ்,
8, சித்திரக்கோட்டம்,
கல்பனா சாலை, உடுமலைப்பேட்டை.
sarathi_pet@yahoo.com

வயது : 21

கல்வி : பிசிஏ

பணி : வெப்டிசைனிங் அண்டு மார்க்கெட்டிங்

ஆர்வம் : மல்ட்டிமீடியா டெக்னாலஜி

கேள்வி : டிவிடி பிளேயருக்கும், சிடி-ஆர்க்கும் என்ன வித்தியாசம்?

கருத்து : தங்கள் வெற்றி பயணம் செம்மையாக தொடர எங்களது வாழ்த்துகள்.



படிப்பகம்

www.padippkam.com



# செவ்வாய் கிரகத்தில் இன்டர்நெட்

☞வினாயக்



இன்டர்நெட்டின் கொடி இப்போது செவ்வாய் கிரகத்திலும் பறக்க ஆரம்பித்து விட்டது. ஏதோ சயின்ஸ் பிக்ஷனுக்கான பீடிகை என்று நினைக்க வேண்டாம். இது கதையல்ல நிஜம்.

வேற்று கிரகங்களுக்கும், பூமிக்கும் இடையே தகவல் தொடர்பு ஊடகம் அமைப்பது அவ்வளவு சாதாரண விஷய மில்லை. நிறைய செலவு பிடிக்கும் இந்த பிராஜெக்ட்டை நாசா மண்டையை உடைத்து அலசியபோது பிறந்ததே இந்த ஐடியா. பேசாமல் ஏற்கனவே இருக்கும் இன்டர்நெட்டையே இதற்கும் பயன்படுத்தினால் என்ன? என்று யோசித்த நாசா, ஏற்கனவே உள்ள கட்டமைப் போடு புதிதாக சில மாற்றங் களையும் சேர்த்து பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக டிஎஸ்என் (DSN-Deep Surface Network) எனப்படும் நெட் வொர்க்கை வடிவமைத்துள்ளது.

பூமியில் இன்டர்நெட் எப்படி செயல்படுகிறது? ஒவ்வொரு நாட்டி லும் சர்வர்கள் உள்ளன. அவையெல்லாம் ஒருங் கிணைக்கப்பட்டுள்ளன. இதே அமைப்புதான் செவ்வாய் கிரகத்திலும், கேட்வேக்கள் எனப் படும் இணைய தலைவாசல் செவ்வாயில் கட்டப்படும்.

இந்த கேட்வேக்கள் சில நெட்வொர்க் புரோட்டோ கால்களை அடிப்படையாக கொண்டு இயங்கும். பூமிக்கும், செவ்வாய் கிரகத்திற்கும் இடையே பல கேட்வேக்கள் இருக்கும். பூமிக்கும், செவ்வாய்க்கும் இடையே உள்ள தூரம் அதிகம். எனவே தகவல் பரிமாற்றத்தின் போது தகவல்கள் சின்ன, சின்ன பொட்ட லங்களாக (Packets) பிரிக்கப் படுகிறது. இவை அடுத்த கேட்வேயை அடைந்தவுடன் பொட்டலங்கள் ஒன்றாக கோர்க்கப்படுகிறது. இப் படியாக ஒவ்வொரு கேட்வேயை தாண்டி பூமியை வந்தடைகிறது.




கேட்வேக்கள் பூமி அல்லது செவ்வாய் கிரக மேற்பரப்பில் (Surface) மட்டும் அமைக்கப்பட போவதில்லை.

. இந்த கிரகங்கள் சுற்றி வரும் அவற்றின் வட்ட பாதையிலும் (Orbit) வரிசை யாக அமைக்கப்படும். படத்தை பாருங்கள். இது சாத்தியம்தானா என்று நினைக்கின்றீர்களா..?

ஜேபிஎல் (JPL-Jet Pro pulsion Laboratory) என்ற நிறுவனம்தான் இந்த செவ்வாய் கிரக இன்டர்நெட் பிராஜெக்ட்டை ஆரம்பித் துள்ளது.

உண்மையில் சொல்லப் போனால் பூமியில் உள்ள இன்டர் நெட் அமைப்பை விட செவ்வாய் கிரகத்திற்கும், பூமிக்குமாக இன்டர் நெட்டை அமைப்பது வெகு சுலபம் என்று உற்சாகமாக இவர்கள் கூறுகிறார்கள்.

தவிர இப்போது மேலும் சில நிறுவனங் கள் இந்த செவ்வாய் கிரக திட்டத்துக்கு நிதி உதவி தர முன் வந் துள்ளார்கள். இதனால் இத்திட்டம் இன்னும் சுலபமாக சாத்தியப்படும் தூரத்தில் உள்ளது.

இப்போது உள்ள ஒரு குறைபாடு, பேண்டு வித் குறைவு. இணையத்தின் பேண்ட்வித் (Bandwidth) இன்னும் அதிகமானால் கோள்களுக்கு இடையே உள்ள தகவல் பரிமாற்ற வேகம் விரைவாகும். யார் கண்டது, செவ்வாய்கிரக நண்பிகளுடன் (!?) பூமி யிலிருந்தபடியே சாட்டிங்கில் வழியும் நிலை கூட உண்டாகலாம்!! ●



படிப்பகம்

# விண்டோஸ்98 டிப்ஸ்!

-சஞ்சய்

கணிப்பொறியில் இயங்கும்போது எழும் சந்தேகங்களுக்கும், சிக்கல்களுக்கும் விடை காண இனி எவரையும் நாட வேண்டாம். ஆன்லைனில் இலவசமாக தொழில்நுட்ப கூறுகளை கற்றுத்தரவும், சந்தேகங்களுக்கு விடையளிக்கவும், சில யுத்திகளை சொல்லித் தரவும் ஏராளமான பயனுள்ள வலைமனைகள் உலவுகின்றன. அவற்றுள் சிறந்தவைகள் சில...



## கணிப்பொறிகளின் அடிப்படைகளை கற்றுக் கொள்ள!

புரோகிராமிங் செய்யும் அளவுக்கெல்லாம் நமக்கு தொழில்நுட்ப அறிவு இல்லை. கணிப்பொறி பயன்படுத்துவேன் இணையத்தை இயக்குவேன்! என்று கூறுவோர்க்கு ஏற்ற ஆசான், நண்பன்!

கணிப்பொறி அடிப்படைகளிலிருந்து, இணையத்தை இயக்குதல் வரை எழும் சந்தேகங்களுக்கும், சிக்கல்களுக்கும் விடையளிக்கிறது இத்தளம். நமது சந்தேகங்களை முன்வைத்தால் உடனுக்குடன் பதில் பெறலாம்.

தளத்தின் பெயர் :
www.syspot.earthweb.com/sphelp.html

## விண்டோஸ் வழிகாட்டி!

விண்டோஸ் பயன்படுத்துவோர்க்கான வழிகாட்டி. விண்டோஸில் இருக்கும் அப்ளிகேஷன்களைப் பற்றிய விரிவான விளக்கங்களோடு, விண்டோஸை முழுமையாக பயன்படுத்தக் கூடிய எளிய யுத்திகளையும், உதவிக் குறிப்புகளையும் அளிக்கிறது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பற்றிய தனிப்பகுதி உள்ளது. இதில் இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் உள்ள அனைத்து இயக்க வசதிகளையும் அவற்றை எளிமையாக இயக்கும் முறைகளையும் விளக்கியுள்ளனர்.

தளத்தின் பெயர் :
www.winfiles.com

## வாப் பற்றி முழுமையாக அறிய!

வாப் பற்றி முழுமையாக அறிய உதவுகிறது இத்தளம். வாப் தொழில்நுட்பம் என்றால் என்ன? அதன் செயல்பாடுகள், பயன்கள் மற்றும் பயன்படும் விதம் போன்றவை எளிமையாக புதியவர்களுக்கு புரியும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. வாப் பற்றிய புதிய தகவல்கள், தொழில்நுட்ப கூறுகளைக் கொண்ட வலைமனைகளின் தொடுப்புகளையும் கொண்டுள்ளது.




தளத்தின் பெயர் :
www.anywhereyougo.com

## இன்டர்நெட் எக்ஸ்புளோரர் உதவிக் குறிப்புகள்!

பிரவுசர்களைப் பற்றி குறிப்பாக இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பயன்படுத்துவது பற்றி விளக்கமாக அளித்துள்ளது இத்தளம். இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் உள்ள குறுக்கு வழிகீகள், மேம்பட்ட வசதிகள் இவற்றுடன் வேகமாக பிரவுசிங் செய்ய உதவிக் குறிப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன.

தளத்தின் பெயர் :
www.activewin.com

## வலைமனை வடிவமைப்பு பயிற்சிகள்!

வலைமனை வடிவமைப்பில் ஆரம்ப நிலையில் உள்ளோர், ஆர்வம் கொண்டோர்க்கான வழிகாட்டும் தளம். வலைமனை வடிவமைப்பு தொடர்பான எளிய உதவிக் குறிப்புகளையும், ஆலோசனைகளையும் வழங்குகிறது.

புதியவர்களுக்காக தொழில்நுட்பங்களை கற்றுத் தரும் வலைமனைகளின் தொடுப்புகளைக் கொண்டுள்ளது. ஆன்லைனில் பயிற்சி



www.padippkam.com
படிப்பகம்

வகுப்புகளையும் நடத்துகிறது.

தளத்தின் பெயர் :
www.webreference.com

## ஐஎஸ்பிக்கள் எப்படி இயங்குகிறார்கள்?

இன்றளவில் நம்மில் பலருக்கு இணையம் என்றால் என்ன என்று தெரிந்தும், அதன் பயன் செயல்பாடுகள் முழுமையாக தெரிவதில்லை. இத்தளம் இணையம் என்றால் என்ன? என்பதில் தொடங்கி இன்றுவரை மேம்பட்டுள்ள இணைய தொழில் நுட்பங்கள் வரை விளக்கங்களையும் உதவிக் குறிப்புகளையும் அளிக்கிறது. ஐஎஸ்பிக்கள் பற்றியும் தனிப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

தளத்தின் பெயர் :
www.earthlink.com/.
internet/webbrowsers

## நெட்ஸ்கேப் பற்றி அறிய மின்-புத்தகம்!

நெட்ஸ்கேப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டு அதில் செயல்பட-ஆர்வமுள்ளோர்க்கான தளம். எலெக்ட்ரானிக் புத்தக மையத்தை ஆன்லைனில் கொண்டுள்ளது.

நெட்ஸ்கேப் பற்றிய விளக் கங்களை தனித்தனி தலைப்புகளில்




அளித்துள்ளனர். இலவசமாக ஆன்லைனில் படிக்கலாம்.

தளத்தின் பெயர் :
www.home.netscape.com/
support/books




## சிஸ்டம் ஃபைலை இலவசமாக பதிவிறக்கலாம்!

விண்டோஸ் 98ல் புதிய மேம்பாடுகள், வசதிகள் பற்றி அறிவிக்கும் தளம். விண்98ல் ஏதேனும் சிஸ்டம் ஃபைல், டிரைவர்கள் தொலைந்தால் இத்தளத்திலிருந்து இல வசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விண் 98 பற்றிய முழு விளக்கங்களை புதியவர் களுக்காக வழங்குகிறது.

தளத்தின் பெயர் :
www.microsoft.com/windows98/
downloads/corporate.asp

## இலவச யுட்டிலிட்டிகள்!

கணிப்பொறிக்கு இன்றியமை யாத சில யுட்டிலிட்டிகளை கொண் டுள்ளது இத்தளம். ரெஜிஸ்ட்ரிக்கு போகாமலேயே புரோகிராம்களை கையாள ஸ்டார்ட்-அப் மேனேஜ ரைக் கொண்டுள்ளது. இத்தளத்தி லிருந்து இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம்.

தளத்தின் பெயர் :
www.delphifreestuff.com

## ஜாவாஸ்கிரிப்டுக்கு ஆன்லைனில் பயிற்சிகள்!

ஜாவா ஸ்கிரிப்ட் பயிலும் தொடக்க நிலை பயனாளர்க்கான தளம். ஜாவா ஸ்கிரிப்ட்-ல் உதவிக் குறிப்புகளையும், ஆன்லைனில் பயிற்சியும் அளிக்கிறது இத்தளம். ஜாவா ஸ்கிரிப்டின் அடிப்படை களையும் புதியவர்களுக்கு கற்றுத் தருகிறது.

தளத்தின் பெயர் :
www.webteacher.com/javascript/

இதுபோல் ஜாவா ஸ்கிரிப்ட் முழுமையான சோர்ஸ் கோட் உடன் உதவிக் குறிப்புகளை அளிக் கிறது இத்தளம். எடுத்துக்காட்டு களுடன் அளித்திருப்பது தளத்தின் சிறப்பு. தளத்தின் பெயர் :
www.webreference.com/javascript/



www.padippkam.com









## ஹார்டுவேர் சாதனங்கள், விளக்கங்கள்!

கணிப்பொறி ஹார்டுவேர் பற்றி விளக்கும் தளம், மதர்போர்டிலிருந்து மவுஸ்பேடு வரை அனைத்து ஹார்டுவேர் சாதனங்கள் பற்றி தனித்தனியே விளக்கங்கள், அவற்றின் செயல்பாடுகள் அளிக்கப் பட்டுள்ளன. கணிப்பொறிக்குத் தேவையான டிரைவர்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தளத்தின் பெயர் : www.gw2k.com/support

## கேள்வி-பதில், எம்எஸ்ஆஃபீஸ் டிப்ஸ்!

பிசி நெட்வொர்க்கிங் மற்றும் அசெம்பிளிங், கணிப்பொறி பராமரித்தல் துறையில் எந்த ஒரு கேள்வியானாலும், சந்தேகமானாலும் ஆன்லைனில் கேட்டு உடனுக்குடன் விடை பெறலாம்.

எம்எஸ் ஆஃபீஸ்க்கென தனிப்பகுதி உள்ளது. இதில் எம்எஸ் ஆஃபீஸ் தொகுப்பில் உள்ள அப்ளிகேஷன்கள் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளலாம்.

தளத்தின் பெயர் : www.helpanswers.com

# பதிவிறக்கிய பிஎம்பி ஃபைலை ஜேபெக்காக மாற்ற!

வலைப்பக்கங்களை அப்படியே பதிவு செய்து, சேமிக்க Print Screen ஆப்ஷனைப் பயன்படுத்துவோம். கீபோர்டில் உள்ள PrintScreen என்ற கீயை அழுத்த, மானிட்டரில் உள்ள அப்ளிகேஷன் அப்படியே பதிவாகி விடும். பின் எம்எஸ் வேர்டு, பெயின்ட் போன்றவைகளில் சென்று Paste கொடுக்க பதிவு செய்யப் பட்ட அந்த அப்ளிகேஷன் இமேஜாக வந்தமரும். பின் அவற்றை சேமிக்கலாம். இதில் எம்எஸ் பெயின்டில் சேமிக்கப் படுபவை பிஎம்பி (BMP) ஃபார்மேட்டில் பதியப்படும்.




பிஎம்பி ஃபார்மேட்டில் பதியப்படும் ஃபைல்கள் அளவு பெரியவையாக இருக்கும். இவற்றை சுருக்கிப் பதிய வின்ஜிப் (Winzip) பயன்படுத்தினாலும் அளவுகள் சற்றுதான் குறையும். இதனால் ஃப்ளாப்பியில் காப்பி செய்ய இயலாது. மின்னஞ்சலில் அட்டாச்மென்ட் ஃபைலாக இவற்றை அனுப்பினாலும் அளவுகள் அதிகமாக உள்ளதால் ஏற்காது. ஏற்றாலும் மின்னஞ்சல் பெறும் இன்பாக்ஸ் பகுதிக்கு மற்ற மின்னஞ்சல்கள் வருவது தடைபடும்.

இவற்றுக்கு எளிய மாற்று வழி, பிஎம்பி ஃபைலை ஜேபெக் ஃபைலாக மாற்றுவது. இதைச் செய்ய பிஎம்பி ஃபைல் உள்ள எம்எஸ் பெயின்ட் திரையை திறந்து கொண்டு File⇨SaveAs கொடுக்கவும்.

பின்வரும் டயலாக் பாக்ஸில் ஃபைல் ஃபார்மட்டுகள் கொண்ட வரிசையில் JPEG என்பதை தேர்ந்தெடுத்து Open கொடுக்க, அந்த பிஎம்பி ஃபைல் ஜேபெக் ஃபைல் ஃபார்மட்டுக்கு மாற்றப்பட்டு சேமிக்கப்படும்.



படிப்பகம்

www.padippkam.com



# நெட்டிசன்களின் கேள்விகளும், பதில்களும்!!

டிரையல் வெர்ஷன் (Trial Version) புரோகிராம்களை காலம் (Period) முடிந்தபின் பயன் படுத்த ஏதேனும் யுத்திகள் உள் ளனவா? ஒரிஜினலை வாங்கவும் என்று சொல்லாதீர்கள்.

-டாக்டர். எல். தினகர்கண்ணன்,
11-ஜி, பாரக்ஸ், ஈவேரா சாலை,
புத்தூர், திருச்சி-620 017.
drdhinakar@hotmail.com

இந்த கேள்விக்கான பதிலை அளிப்பவர் : எம்.பாலாஜி,
105, அஜீஸ்நகர்,
அருப்புக்கோட்டை.
tidelganesh@hotmail.com

இதற்கு நீங்கள் விண்டோஸ் ரெஜிஸ்டரியில் கை வைக்க வேண்டும். ரெஜிஸ்ட்ரியை முழுமை யாக தெரிந்தவர்கள் மட்டும் செய்யவும். அந்த சாஃப்ட்வேரை பேக்கப் எடுத்துக் கொள்ளவும். நீங்கள் எந்த சாஃப்ட்வேரை தொடர்ந்து பயன்படுத்த நினைக் கிறீர்களோ, அந்த சாஃப்ட்வேர் பெயரிலோ அல்லது அந்த சாஃப்ட் வேர் தயாரித்த நிறுவனத்தின் பெயரிலோ உள்ள Keyஐ Delete செய்யலாம்.

அந்த சாஃப்ட்வேர் கீயை எப்படி கண்டுபிடிப்பது? Ctrl+F கீயை அழுத்தவும். இப்போது தோன்றும் Find Dialog Boxல் அந்த சாஃப்ட் வேர் பெயரை டைப் செய்து Find Keyஐ அழுத்தவும். அந்த கீ கண்டு பிடிக்கப்பட்டால் அதை உறுதி செய்து அதை Delete செய்யவும். இதில் பெரும்பாலும் Install Date, First time use போன்ற String valueஐ பயன்படுத்தி இருப்பார்கள். இதை நீங்கள் ஒவ்வொரு expiry ஆகும் போதும் அந்த கீயை ரெஜிட்ரியில் டெலிட் செய்ய வேண்டும். ஒவ் வொரு டெலிட் செய்யும் போதும் அந்த சாஃப்ட்வேர் புதுப்பிக்கப் படும். பெரும்பாலும் HKEY_LOCAL_MACHINE, HKEY-ல் இருக்கலாம். ஒவ்வொரு சாஃப்ட்வேரை பொறுத்தது.

இன்னொரு வழி, Serial 2000 என்ற சாஃப்ட்வேர் உள்ளது. இது ஒவ்வொரு சாஃப்ட்வேருக்கான CD Key, Registry Name, Serial Number போன்றவற்றுடன் தருகிறது. இதை இணைத்து அந்த சாஃப்ட்வேரை தொடர்ந்து பயன்படுத்தலாம். எவ்வித கட்டணமும் இல்லாமல். இதை (Serial2000) இலவசமாக www.serial2000.info என்ற தளத்தில் இருந்து பதிவிறக்கிக் கொள்ளலாம்.

இதே கேள்விக்கு அடுத்து பதிலளிப்பவர்: துரைசாமி தீபன்
ddur@yahoo.com

இரண்டு வழிகள் உண்டு. ஆனால் இரண்டும் விதிமுறைகளிலி ருந்து சற்று விலகியிருக்கும் வழிகள். முதலாவது, இன்ஸ்டாலேஷன் தேதியை ஒற்றை இலக்க தேதியாக மாற்றுவது. ஆனால் இம்முறை புதிய மேம்பட்ட டிரையல் புரோகி ராம்களுக்கு ஒத்து வராது. எனவே இரண்டாம் வழி, சாஃப்ட்வேரில் கீறல்களையும் ஒட்டுதல்களையும் (patches) ஏற்படுத்த வேண்டும். இதனால் சாஃப்ட்வேரில் ஒட்டடல் கள் ஏற்பட்டு கால நிர்யணம் உடைக்கப்படும்.

ஒட்டடல்களை ஏற்படுத்த புரோகி ராம்கள் www.altavista.com தேடல் பொறியில் புதைந்துள்ளன. தேடிப் பெறலாம். அல்லது www.cracks.am தளத்திலிருந்து கீறல்களையும் ஒட்டடல்களையும் பெற்று, சாஃப்ட் வேரில் செயல்படுத்தலாம்.

எனது கணிப்பொறியிலிருந்து அழிந்த (erase) மின்னஞ்சல்களை திரும்பப் பெறுவது எப்படி?

-ஏ. மதனகோபால்,
1/427, ஆர்எம்எஸ் காலனி,
இந்திராகாந்தி நகர் விரிவாக்கம்,
திருச்சி-620 102.
mgopal74@yahoo.com.

இந்த கேள்விக்கான பதிலை அளிப்பவர் கே.வான்மதி,
vanmathi_moon@yahoo.com

முடியும். மின்னஞ்சல் பகுதியில் அழிக்கப்பட்ட மின்னஞ்சல் 'Trash' என்ற ஃபோல்டரில் போய்ச் சேரும். சில குறிப்பிட்ட காலம் இருந்து விட்டு பின் அங்கிருந்து நீக்கப்பட்டு விடும். எனவே இன்பாக்ஸ் பகுதியி லிருந்து அழிக்கப்பட்ட மின்னஞ் சல்களை, Folders கிளிக் செய்து அதில் Trash ஃபோல்டரில் திரும்பப் பெற வேண்டிய மின்னஞ்சல்களை தேர்வு செய்து கொள்ளவேண்டும். பின் அப்பக்கத்தில் கீழே உள்ள Move to folders என்ற சொல்லுக்கு அருகிலிருக்கும் பாக்ஸில் Inbox என்பதை கிளிக் செய்தவுடன் தேர்ந் தெடுக்கப்பட்ட மின்னஞ்சல்கள் மீண்டும் இன்பாக்ஸ் பகுதிக்கு வந்தமரும்.

### தேர்தல் ஆணையத்திடம் ஆன்லைனில் மனு அளிக்கலாம்!

தேர்தல் நேரத்தில் நடக்கும் முறைகேடுகள், குளறுபடிகள், குற்றங்கள் புரியும் எம்எல்ஏ-எம்பிக்களைப் பற்றி தேர்தல் ஆணையத்திடம் ஆன்லைனில் முறையிடலாம். www.ipetitions.com/campaigns/supremecourtindia_clean_politics தளத்திற்கு சென்று தேர்தல் மற்றும் நம் தொகுதி உறுப்பினர் குறித்து மனுக்கள், புகார்கள் அளிக்கலாம். உடனே நடவடிக்கை எடுக்கிறார்களோ இல்லையோ? நிச்சயமாக நாம் அளிக்கும் மனு குப்பைத தொட்டிக்கு போகாது. (நம் திறமையான அரசு பணியாளர்கள் மனுக்களை பிரிண்ட் அவுட் எடுத்து அதை குப்பைத் தொட்டியில் போட்டாலும் போடுவார்கள்.)

கேள்விகளும், அதற்கான பதில்களும் அளிப்போர் முழு முகவரியுடன் அனுப்பவும். மின்னஞ்சல் அனுப்புவோரும் முழு விவரங்கள், முகவரியுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



படிப்பகம்

மொழிகளை கற்றுத் தரும் தளங்கள்

# ஆங்கிலத்தில் சரளமாகப் பேச!!

மஞ்சுளா

தாய்மொழி தவிர வேறு மொழிகளை கற்கவேண்டு மென்றால் தனியாக ஒரு வாத்தியாரைப் பிடித்து, பீஸ் கொடுத்து கற்றுக் கொள்வதற்குள் போதும் என்றாகி விடும். இதில் அந்த ஆசிரியர் பண்ணும் பந்தாக்களை வேறு சகித்துக் கொள்ள வேண்டும். இனி இந்தக் கவலையில்லை. அமர்ந்த இடத்திலிருந்தே ஆங்கிலம் உட்பட பல உலக மொழிகளை ஆன்லைனில் கற்றுக் கொள்ளலாம், இலவசமாக. இதற்கென சேவைகள் புரியும் பயனுள்ள வலைமனைகள் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க...




## மொழிகளைக் கற்க அகராதி!

ஆங்கிலம் உட்பட பிரெஞ்ச், ஸ்பானிஷ், இத்தாலி மற்றும் மேஜர் ஆன மொழிகளை கற்க எளிமையான வழிமுறைகளையும் ஆன்லைனில் பயிற்சிகளையும் வழங்குகிறது இத்தளம்.

ஒவ்வொரு மொழிக்கும் தனித் தனியாக அகராதிகளையும் கொண்டுள்ளது. ஆங்கிலம் கொஞ்சம் அறிந்திருத்தல் அவசியம். ஏனெனில் பல மொழிகளை கற்க ஆங்கிலத்தைத்தான் இத்தளம் பொதுவான மொழியாகக் கொண்டுள்ளது.

தளத்தின் பெயர் : www.bbc.co.uk/education




## 30 ஆயிரம் உலக மொழித் தளங்கள், ஒரே இடத்தில்!

ஏறக்குறைய உலகின் பல பகுதிகளில் பேசப்படும் அனைத்து மொழிகளையும் தொடுப்புத் தளங்களில் கொண்டுள்ளது. உலக மொழிகளைக் கற்றுத்தரும் 30 ஆயிரம் வலைமனைகள் இத்தளத்தில் வரிசையிலுள்ளன. கற்க வேண்டிய மொழியை சற்று அறிந்திருந்தால் அம்மொழியில் புலமை பெறவும் உதவுகிறது இத்தளம், தொடுப்புகளின் உதவியுடன்.

தளத்தின் பெயர் : www.language-on-the-web.com

## ஆன்லைனில் ஆங்கில அகராதி!

ஆங்கிலத்தை அடிப்படைகளிலிருந்து கற்றுத் தருகிறது இத்தளம். படிப்படியாக ஆங்கிலத்தில் பிழைகளின்றி கடிதங்கள் எழுத, சரளமாகப் பேச என தனித்தனி பகுதிகளில் ஆங்கிலத்தை கற்றுத் தருகிறது. கடினமான ஆங்கிலச் சொற்களுக்கு விளக்கங்கள், ஆங்கில அகராதி போன்றவை தளத்தின் சிறப்பம்சங்கள்.

இத்தளத்தின் செய்தி மடல்கள் பகுதியில் பதிவு செய்து கொண்டால், மின்னஞ்சலில் ஆங்கிலத்தில் செறிவுகளை அறிந்து கொள்ளலாம்.

www.english-at-home.com

## பிரெஞ்சு மொழி கற்க எளிய பயிற்சிகள்!

ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக, வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் பெற பிரெஞ்ச் அறிந்திருப்பது



படிப்பகம்

www.padippkam.com



நன்று! என்ற கூற்று நிலவுகிறது. கற்றுக் கொள்ள எளிமையான மொழியான பிரெஞ்ச்-ஐ அடிப்படைகளிலிருந்து எளிமையாக கற்றுத் தருகிறது இத்தளம்.

பிரெஞ்ச் கற்க பயிற்சிகளை மேற்கொள்வோருக்கு எளிமையான உதவிக் குறிப்புகளையும் அளிக்கிறது.

தளத்தின் பெயர் :
www.frenchlesson.org

## ஜெர்மன் மொழியில் அடிப்படை பயிற்சிகள்!

ஆங்கில அறிவு இருந்தால் போதும். ஜெர்மன் மொழியை எளிமையாக, விரைவாக கற்றுத் தருகிறோம் என உறுதியளிக்கிறது இத்தளம்.

கோத் இன்ஸ்டிட்யூட் என்ற பயிற்சி மையம், ஜெர்மன் மொழியை அடிப்படைகளிலிருந்து கற்றுத் தருகிறது. ஆன்லைனில் இதற்கென பயிற்சி வகுப்புகளும், மாதிரித் தேர்வுகளும் நடத்தப் படுகின்றன.

தளத்தின் பெயர் :
www.textthaus.com




## மொழிகளைக் கற்க அரட்டை அறை!!

உலகில் பெருவாரியாக பேசப் படும் மொழிகளை தன்னுள் கொண்டுள்ளது இத்தளம். ஆன் லைன் அரட்டை அறை ஒன்று உள்ளது. இதில் நாம் விரும்பும் மொழியை தேர்ந்தெடுத்து அதற் கான அரட்டை அறையில் அம் மொழியில் புலமை பெற்றவர்களுடன் உரையாடலாம், மொழியை கற்கலாம்.

மொழி பெயர்ப்பு மென் பொருளும் ஆன்லைனில் கிடைக் கிறது. பதிவிறக்கி எந்த ஒரு மொழியாக இருந்தாலும் அவற்றின் சொற்பொருள்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து அறிந்து கொள்ளலாம்.

தளத்தின் பெயர் :
www.worldlanguage.com




## ஐரோப்பிய மொழிகளுக்கு சொற்பொருள் அகராதி!

ஐரோப்பாவில் பேசப் படும் பெரும்பான்மை யான மொழிகளுக்கான ஆன் லைன் சொற் பொருள் அகராதியைக் கொண் டுள்ளது இத்தளம். சொற்களுக்கான பொருள் விளக்கங்களை ஆங்கிலத் தில் அறிந்து கொள்ளலாம். இந்த அகராதியை இலவசமாக பதி விறக்கிக் கொள்ளலாம்.

தளத்தின் பெயர் :
www.dictionaries.travlong.com

## ஒலியமைப்போடு பயிற்சியளிக்கிறது!

மொழிகளை கற்றுக் கொள்ள மட்டுமல்ல அம்மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாடு, கலை மொழியின் வரலாற்றோடு கற்க பயிற்சியளிக்கிறது இத்தளம்.

பிரெஞ்ச், ஜெர்மன், ஜப்பான், இத்தாலி, ஸ்பானிஷ் மொழிகளை கற்றுக் கொள்ள சிறப்புப் பகுதிகள் உள்ளன.

ஒரு குறிப்பிட்ட மொழியை தேர்ந்தெடுத்து அதற்கான பகுதியில், அம்மொழியை கற்க அடிப்படை. பயிற்சிகள், ஆன்லைனில் வகுப்புகள் மொழியைப் பற்றிய தொடுப்புகள் இவற்றோடு, அம்மொழியில் தேர்ந்த வர்களோடு உரையாட அரட்டை அறையை பயன்படுத்தி மொழியை கற்கலாம்.

ஒலியமைப்போடு பயிற்சிகள் அளிக்கப்படுவதால், மொழியி லுள்ள சொற்களை சரியாக உச்சரிக்கவும் உதவுகிறது.

தளத்தின் பெயர் :
www.sfu.co/language-learning-centre



படிப்பகம்

www.padippkam.com

# மொழிகளை கற்றுத் தரும் தளங்கள்

## இலக்கணங்களை அறிய!

பரவலாகப் பேசப்படும் பல மொழிகளின் இலக்கணத்தை எடுத்தியம்புகிறது இத்தளம். ஒரு மொழியை கற்றபின் அம்மொழியிலுள்ள இலக்கணத்தையும், சொற்களை சரியான இடங்களில் பயன்படுத்தும் முறைகளையும் எளிமையாக கற்றுத் தருகிறது.

தளத்தின் பெயர் : www.facstaff.bucknell.edu/rbeard/grammers.html

## மொழி பெயர்த்துத் தரும் தளம்!

மொழி பெயர்ப்புக்கெனவே உள்ள தளம். எந்த ,ஒரு மொழியானாலும், அதில் உள்ள சிக்கலான சொற்களுக்கு எளிய விளக்கங்களை அளிக்கிறது. அறிய வேண்டிய வாக்கியங்களை காப்பி செய்து கொண்டு இத்தளத்திலுள்ள, இதற்கெனவுள்ள விண்டோவில் வைத்து விட்டால் சில நொடிகளில் அந்த வாக்கியத்திற்கான பொருளை அளித்து விடும்.

தளத்தின் பெயர் : www.babefish.altavista.digital.com




## ரஷ்ய மொழியில் சரளமாகப் பேச!

ரஷ்ய மொழியை ஆன்லைனில் கற்றுத் தருகிறது இத்தளம். ரஷ்ய மொழியின் அடிப்படைகளைக் கற்க பயிற்சிகளும், உதவிக் குறிப்புகளும் அளிக்கப்படுகிறது.

இலக்கணக் குறிப்புகளையும், மொழியின் செறிவை அறிய மின் நூலகம் ஒன்றையும் கொண்டுள்ளது. ரஷ்ய மொழியில் சரளமாகப் பேச பயிற்சி புத்தகம் ஒன்று. ஆன்லைனில் உள்ளது. இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம்.

தளத்தின் பெயர் : www.learningrussian.org

## ஜப்பானிய மொழியை எளிமையாக கற்க!!

சிக்கலான கடினமான எழுத்துகள், கற்றுக் கொள்ள அதிக சிரத்தைகளை மேற்கொள்ள வேண்டும் என கூறப்படும் ஜப்பானிய மொழியை கற்றுத் தருகிறது இத்தளம்.

குரல் வழியாக மொழியை கற்றுத் தருவதால், எழுத்துச் சிக்கல்களை களைந்து எளிமையாக கற்கலாம். உச்சரிப்புகளையும் எளிமையாக அறிந்து கொள்ளலாம். மொழியோடு ஜப்பானிய பண்பாடு, கலை ஆகியவற்றையும் கற்றுத் தருகிறது இத்தளம்.

தளத்தின் பெயர் : www.japanese-online.com/language

## ஹாட்மெயிலின் புதிய தோற்றம்!

'பழையன கழிந்து புதியன புகுதல்!' இப்பழமொழியை ஹாட்மெயில் தளம் அண்மையில் மெய்யாக்கியுள்ளது.




ஹாட்மெயில் தளத்தில் மின்னஞ்சல் முகவரி வைத்துள்ளோர்க்கான இல்லப்பக்கம் முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது. முற்றிலும் மாறுபட்டு அழகிய தோற்றத்துடனும், ஹாட்மெயிலின் பிற வசதிகள், செய்திகளை கொண்டு இருந்தாலும் சில நிமிடங்கள் பயனாளரை குழப்பமடைய வைக்கிறது இப்பக்கம். காரணம் லாகின் செய்யும் கட்டமும் நுழைவுச் சொல் கட்டமும் முற்றிலும் மாறுபட்டுள்ளதுதான். முகவரி கேட்கும் கட்டத்தில் நமது முழு முகவரியும் (எ-காprem2k1@hotmail.com) என அளித்தவுடன் மின்னஞ்சல் பக்கத்துக்குச் செல்ல இயலும். எனவே ஹாட்மெயிலுக்கு புதியவர்கள், நீண்டநாள் கழித்து ஹாட்மெயில் தளத்துக்கு விஜயம் செய்பவர்கள், குழம்பாமல், முழு முகவரியும், நுழைவுச் சொல்லும் அளித்து மின்னஞ்சல் பக்கம் செல்லலாம்.



படிப்பகம்

www.padippkam.com



# தமிழ் உச்சரிப்புக்கு உதவிடும் சிடி!

நவீனகுமார்

**இந்த சிடியின் சிறப்பம்சங்கள்**

- சுமார் 800 தமிழ்ச் சொற்கள் + சொற்றொடர்கள் தெரிந்து கொள்ள முடிகிறது.
- பழமொழிகள், சிறுகதைகள், பாடல்கள் என்று அசத்துகின்றன.
- இது சிறந்த தமிழ் அகராதியாகவும் திகழ்கிறது. மாதங்கள், கிழமைகள், காய்கறிகள் என்று பல்வேறு தலைப்புகளில் பரிமாணம் விரிகின்றன.
- பின்னணியில் ரம்யமான இசை ஒலிக்க தமிழ் கற்றுக் கொள்ளலாம்.
- தமிழ் கற்றுக் கொள்ள விழைபவர்கள் தங்களது குரலை (தமிழ் சொற்களை பேசி) பதிவு செய்து வைத்துக் கொண்டு, பின்பு இந்த சிடி உதவி கொண்டு தங்களது உச்சரிப்பை திருத்திக் கொள்ளும் வசதியும் உள்ளது.

அண்மையில் யுனெஸ்கோ (UNESCO) தந்துள்ள ஒரு புள்ளி விவரம் அதிர்ச்சியானது. உலகத்தில் வேகமாக அழிந்து வரும் மொழிகளின் பட்டியலில் தமிழும் இடம் பெற்றுள்ளது. அவர்கள் கணக்குப் படி இன்னும் ஐம்பது ஆண்டுகள் தாக்குப் பிடிக்கும். தமிழ் நாட்டிலேயே தமிழ் உச்சரிப்புக்கு தடுமாறுபவர் கள் அதிகம். அதிலும் என் ஆர் ஐக்களின் குழந்தைகளை கேட்கவா வேண்டும்.




இதுபோன்ற அடுத்த தலைமுறைக்கு தமிழை கொண்டு செல்வதென்பது முழுக்க, முழுக்க கணினித் தொழில்நுட்பம் மூலமே சாத்தியம். நிறைய தமிழ் கற்றுத்தரும் சிடிக்கள் சந்தைக்கு வந்திருந்தாலும், 'பேசு தமிழ்' (SPOKEN THAMIZH) எனும் இந்த சிடி அவற்றுள் தனித்து நிற்கிறது.

இதுவரை வெளிவந்துள்ள சிடிக்களில் அவ்வளவாக இன்டராக்டிவ் (Interactive) எனப்படும் கணினிக்கும், கற்போருக்கும் இடையேயான நல்லுறவு இருந்ததில்லை. இந்த இடைவெளியை களைந்து அருகில் ஓர் தமிழாசான் அமர்ந்து பேசு தமிழை கற்றுத் தருவது போன்ற உணர்வைத் தருகிறது இந்த சிடி.

அனைவரும் பயன்படுத்தும் வகையில் பாடங்கள் அனைத்தையும் காதால் கேட்டு எழுதும் முறையில் (Phonetic Method) ஆங்கில எழுத்துக்களில் தயார் செய்யப்பட்டுள்ளது. இதனால் அனைத்து கணிப்பொறிகளிலும் சாதாரண விசைப்பலகையில் எவரும் டைப் செய்யலாம். இந்த சிடியை முழுமையாக சரியாக பயன் படுத்த உதவி செய்யும் வகையில் அதிக பக்கங்களைக் கொண்ட கையேடு ஒன்றும் வழங்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் கையேடு உள்ளதால் தமிழறியாத தமிழர்கள் பயன்படுத்தும் ஏதுவாக உள்ளது. ஆனால் தமிழை கற்க உதவும் கையேட்டில் தலைப்பைத் தவிர ஒரு இடத்திலும் தமிழ் மொழியின் தடயத்தைக் காணவில்லை.

ஆங்கிலத்தில் அறிந்திருக்கும் தகவல்களை அதனருகில் தமிழிலும் அளித்திருக்கலாம். சிடி மூலம் முழுமையாக கற்க தடுமாறுவோர் கூட இந்த கையேட்டின் உதவியுடன் கற்க விழையும் படி அமைந்திருக்கும்.

ஆக எனக்கு 'டமில் கொஞ்சம் தெரியும்' என்று சொல்லும் தமிழக நாகரிக யுவதிகளிலிருந்து, சுத்தமாக தமிழை கைவிட்டு தவிக்கும் என்ஆர்ஐகள் வரை குறிவைத்து இந்த சிடி வெளிவந்துள்ளது என்று புரிகிறது. தமிழில் பிறர் பேசினால் புரியும். ஆனால் பதிலளிக்க முடியாது என்று சொல்லும் வேற்று மொழிக்காரர்களுக்கும் இந்த சிடி உதவும்.

தொடர்புக்கு : தமிழ் புக் ஹவுஸ் ஆன் இன்டர்நெட் (TAMBHI)

மின்னஞ்சல்:tambhi@vsnl.com.

சிடியின் விலை : ரூ.399



படிப்பகம்

www.padippkam.com

# ஆன்லைனில் கராத்தே கற்கலாம்!

ஜாக்கி(லோக்கல்)சான்

தினமும் காலை விஜய் டிவி, சன் டிவி பார்க்கும் பெண்களுக்கு தற்காப்புக் கலையின் அவசியம் தெரிந்திருக்கும். (தெரியாதவர்கள் இரவு 10 மணிக்கு மேல் சென்னை பாரிமுனை பஸ் நிலையத்துக்கு வந்து அவசியத்தை உணரவும்) ஆன்லைனிலும் தற்காப்புக் கலையின் அவசியம், நுணுக்கங்கள், எளிமையாக கற்றுக் கொள்ள வழிகள் மற்றும் பயிற்சிகளை அளிக்க வலைமனைகள் உதவுகின்றன. அவற்றுள் பயனுள்ள எளிமையான, அழகிய வலைமனைகள் உங்கள் பார்வைக்கு!!

## ஈவ்டீசிங் செய்வோரை வேட்டையாடுவது எப்படி?!

தனியாக நடந்து போய்க் கொண்டிருக்கும்போது பின்னால் இருந்து தாக்கும் நபர்களின் விலா எலும்பை எப்படி முறிப்பது, ஈவ் டீசிங் செய்யும் மிருகங்களிடம் இருந்து தப்பி, அவைகளை வேட்டையாடுவது எப்படி போன்ற தற்காப்பு நுணுக்கங்களைக் கற்றுத் தருகிறது இத்தளம். கூடவே அனாவசியமாக எவரையும் தாக்கக் கூடாது என பக்கம் பக்கமாக அறிவுரைகள் கூறுகிறது.



பெண்களுக்கான எளிய தற்காப்பு முறைகள், உடற் பயிற்சிகள் தனித்தனி பகுதிகளில் படங்களுடன் எளிமையாக விளக்கப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் பாண்ட் படங்களில் வரும்வில்லன்களை அவர் துவம்சம் செய்யும் முறைகளை, எந்த ஆயுதங்களுமின்றி அதே போன்று எதிரிகளை அழிப்பது எப்படி? என சுவாரஸ்யமான டிப்ஸ் அளிக்கிறது இத்தளம்.

தளத்தின்பெயர்: www.pixi.com/~mcjitsu/mcjitsu.html




## வீரர்+வீராங்கனைகளை இணைக்கும் தளம்!

மணந்தால் கராத்தே வீராங்கனையைத்தான் மணப்பேன் என சூளுரைக்கும் வீரர்களுக்கான தளம். தற்காப்புக் கலை அறிந்தவர்களுக்குள் நட்புப் பாலத்தைக் கட்டும் சக்தி வாய்ந்த சிமெண்ட் இத்தளம். ஆன்லைன் டேட்டிங் பகுதியில் நமக்குப் பிடித்த தற்காப்புக் கலை, அடிக்கும் முறைகள், பிடித்த வீரர்களை குறிப்பிட்டு நம் கருத்துக்கு ஒத்த நண்பர்களைப் பெறலாம். இத்தளத்தின் மூலம் இணைந்த வீர, வீராங்கனைகளின் பட்டியல்களையும் கொண்டுள்ளது இத்தளம்.

தளத்தின் பெயர் : www.total-surf.com/dating

## ஜெட்லீ தற்காப்புக் கலை கற்றுத் தருகிறார்!!

நூறு அடி நீளத்துக்கு எம்பி, இருநூறு அடி அகலத்துக்கு தாவி சாகசங்கள் புரியும் குழந்தைகளின் சூப்பர் ஹீரோ ஜெட்லீயின் தளம்.

ஜெட்லீ யார்? அவர் கற்ற தற்காப்புக் கலை எது, சினிமாவில் அவர் சாதித்தவை மேற்கொண்ட சோதனை முயற்சிகள் போன்றவை தனித்தனி பகுதிகளில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. ஜெட்லீ தனது ரசிகர்களுக்கு கற்றுத்தரும் எளிய தற்காப்புக் கலை யுத்திகளும் உள்ளன இத்தளத்தில்!

தளத்தின் பெயர் : www.jet-li.com

## ஜூடோ கலையை எளிமையாக கற்கலாம்!

ஜூடோ எனும் அற்புதக் கலையை கற்றவருக்கு அதன் அருமை தெரியும். எளிமையான அங்க அசைவுகள், ஆனால்



படிப்பகம்

www.padippkam.com



இடிபோன்று இறங்கும் அடிகள். இதுதான் ஜூடோவின் சிறப்பு என பறை சாற்றுகிறது இத்தளம்.

ஜூடோ கலையை கற்க விரும்பு வோர், கற்றுத் தெரிந்தோர்க்காக எளிமையான உதவிக் குறிப்புகள் படங்களுடன் அழகாக விளக்கப் பட்டுள்ளன. குழந்தைகளும் ஜூடோ கற்றுக் கொள்ள தனி பகுதி உண்டு.

தளத்தின் பெயர் :
www.igf.com




## புரூஸ்லீ அளிக்கும் டிப்ஸ்!

தற்காப்புக் கலை என்ற ஒரு அற்புதத்தை உலகெங்கும் பரவச் செய்த புரூஸ்லீயின் ரசிகர்களால் துவங்கப்பட்ட தளம். புரூஸ்லீயின் வாழ்க்கை வரலாறு, அவருடைய சுயசரிதை, தற்காப்புக் கலையில் அவருடைய திறமை, அதை அவர் கற்றுக் கொண்ட விதம் புகைப் படங்களோடு விளக்கப்பட்டுள்ளன.

தமது ரசிகர்களுக்காக புரூஸ்லீ சொன்ன பொன்மொழிகள், எளிமையாக அவர் அளித்த டிப்ஸ் போன்றவை தளத்தின் சிறப்பம் சங்கள். போட்டோகேலரி! என்ற பகுதியில் புரூஸ்லி சண்டை போடும்போது எடுக்கப்பட்ட அரிய புகைப்படங்களும், அவருடைய திரைப்படங்களில் சிறந்த காட்சி களும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.




தளத்தின் பெயர் :
www.brucelee.




## கொரிய தற்காப்புக் கலை

தற்காப்புக் கலையில் சிறந்து விளங்கும் கொரியர்கள் இத்தளத்தில், தங்களது திறமைகளை வெளிக் காட்டியுள்ளனர். கொரிய தற்காப்பு கலை ஆன்லைனில் கற்றுத் தரப்படுகிறது, ஆனால் புதியவர்களுக்கு மட்டும். பெண்கள், குழந்தைகள் ஆபத்து நேரங்களில் கொரிய தற்காப்புக் கலையை பயன்படுத்தி எதிரிகளை வீழ்த்துவது எப்படி என்று வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

தளத்தின் பெயர் :
itatk.d.com/kmat.htm

## 'ஷோதோகாய்' தற்காப்புக் கலையை கற்கலாம்!

ஷோதோகாய் (Shotokai) எனும் தற்காப்புக் கலையை கற்றுத் தருகிறது இத்தளம். கராத்தே வகையைச் சேர்ந்த இந்த கலையை முறையாகக் கற்றுத் தேர்ந்த வல்லுநர்கள் ஆன்லைனில் பயிற்சிகளை அளிக்கின்றனர், படங்களுடன்.

மேலும் இக்கலையைக் கற்றுத் தரும் தளங்களின் பட்டியலையும் அளிக்கிறது. ஷோதோகாய் என்சைக்ளோபீடியா பகுதியில் இக் கலையின் தற்காப்பு நுணுக்கங்களை



படிப்பகம்

www.padippkam.com

# தற்காப்பு கலை தளங்கள்







தேடிப் பெறலாம்.

தளத்தின் பெயர் :
www.shotokai.cl

## ஆயுதங்களை கையாள பயிற்சிகள்!

தற்காப்புக் கலைக்காக பயன் படும் ஆயுதங்களை வரிசைப்படுத்தியுள்ளது இத்தளம். ஆயுதங்களை திறம்பட கையாளும் விதம் பற்றிய உதவிக் குறிப்புகளையும் அளிக்கிறார்கள் வல்லுநர்கள். பல்வேறு தற்காப்புக் கலை ஆயுதங்கள் ஆன்லைனில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. வேண்டியவற்றை தேர்வு செய்து வாங்கலாம்.

தளத்தின் பெயர் :
www.bynoon.com







## கிடைக்கும் பொருட்களை ஆயுதங்களாக மாற்ற!!

தற்காப்புக்கலைக்கென்றே உள்ள ஆயுதங்கள் மட்டுமல்ல, கையில் கிடைக்கும் எவற்றையும் ஆயுதமாக்கலாம் என்கிறது இத்தளம். பணிக்குச் செல்லும் பெண்கள், இல்லத்தரசிகள் ஆபத்து நேரங்களில் பயன்படுத்தக் கூடிய பொருட்கள், அவற்றை ஆயுதங்களாக மாற்றி கையாளும் விதம் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. சில தற்காப்புக் கலை நுணுக்கங்களும் தனிப்பகுதியில் உள்ளன.




தளத்தின் பெயர் :
www.selfdefence.com

## தற்காப்புக்கலை விளையாட்டுகள்!

தகவல்களஞ்சியம் (என்சைக்ளோபீடியா) கொண்டுள்ளது. இதில் தற்காப்புக் கலை குறித்த எந்த ஒரு தேடலுக்கும் விடைகள் எளிதாகப் பெறலாம். காலண்டர் பகுதியில், உடற்பயிற்சி செய்யக் கூடிய நேரங்கள், எந்த நேரத்தில் என்ன உடற்பயிற்சிகள் மேற்கொள்ளவேண்டும் போன்ற விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதை பதிவிறக்கி பயன்படுத்திக் கொள்ளலாம். தற்காப்புக் கலையை எளிமையாகவும், சுவாரஸ்யமாகவும் கற்க ஆன்லைன் விளையாட்டுப் பகுதியும் உள்ளது இத்தளத்தில்.

தளத்தின் பெயர் :
www.djay.clara.net

## வீடியோ படங்களில் பயிற்சி!

அய்கிடோ (Aikido) என்னும் தற்காப்புக் கலை பற்றிய தளம். இக் கலை பற்றிய பல்வேறு நுணுக்கங் களையும், பயிற்சிகளையும் அளிக்கிறது. எளிய முறையில் இந்த தற்காப்புக் கலையை கற்க வீடியோ படங்களும் ஆன்லைனில் உள்ளன. பதிவிறக்கி பயிற்சிகள் மேற்கொள்ளலாம். கராத்தே கலை தொடர்புடைய ஜோக்குகள், கார்ட்டூன் படங்கள் தளத்தின் ஹைலைட்.

தளத்தின் பெயர் :
www.aikiweb.com



படிப்பகம்

www.padippkam.com



# அறிவுப்பாலம் அமைப்போம் வாருங்கள்!

வாசக நண்பர்களே! உங்கள் கருத்துக்கொப்ப, தொழில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ள நண்பர்கள் வேண்டுமா! உடனே உங்களைப் பற்றியும் கணிப்பொறி, இணையம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் கருத்துகளையும் உங்கள் புகைப்படத்தோடு அனுப்பி வையுங்கள். அதை எமது இன்டர்நெட் இதழில் வெளியிடுகிறோம். வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு வாசகர்களே பதிலளிக்கலாம். பதிலளிக்கும் வாசகர்களையும் புகைப்படத்தோடு பிரபலப்படுத்துகிறோம். சிறந்த கேள்விகள், கருத்துகளை முன்வைப்பவருக்கும், பதில்ளிப்பவருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து அனுப்புங்கள்.

பெயர் : ______________________

முகவரி : ______________________

______________________

______________________

புகைப்படம்
(விருப்பமெனில்)

மின்னஞ்சல் : ______________________ வயது : __________

கல்வித் தகுதி : ______________________

பணி : ______________________

ஆர்வம் : ______________________

கேள்வி/கருத்துகள் : ______________________

______________________

______________________

______________________

______________________

______________________

______________________

**அனுப்ப வேண்டிய முகவரி : கணித்தமிழ் மீடியா** 60, மாடல் ஸ்கூல் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006
**e-mail : internetulagam @kanitamil.com**

படிப்பகம்

www.padippkam.com



# நாங்கள் தயார்! வண்ணத்தில் வெளியிட நீங்கள் தயாரா?

அறிவுப் பாலம் பகுதியில் கணிப்பொறி, இணையம் தொடர்பான வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொறுப்பை வாசகர்கள் வசமே விட்டிருப்பது புதுமையானது. மிகவும் பாராட்டத்தக்கது. கணிப்பொறி உலகில் இதுவரை எந்த இதழும் செய்திடாத வித்தியாசமான முயற்சி. இன்டர்நெட் உலகம் மென்மேலும் சாதனைகள் படைக்கட்டும்.

-சி.மணி, புத்தனாம்பட்டி,
திருச்சி-621 007.

மிகவும் பயனுள்ள உதவிக் குறிப்புகளையும் செய்முறை விளக்கங்களோடும் சென்ற இதழை வடிவமைத்தற்கு பாராட்டுக்கள். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு பயனுள்ள தொகுப்பு. கேள்வி-பதில் பகுதியில், பிசி-டு-செல், எஸ்எம்எஸ் மற்றும் இ-மெயில் கேள்விகளுக்கு அளித்துள்ள பதில்கள் மிகவும் உபயோகமானது. நெட்டிசன் கேள்விகளும்-பதில்களும் வாசகர்களுக்கு விருந்து. தெரியாததை தெரிந்து கொள்ளவும், தெரிந்தவைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்ளவும் உதவும்.

-மேரவைநாத், சென்னை-24.

புதிய தமிழ்ப் படங்களை www.tamilterra.com என்ற வலைமனையிலும் காணலாம். வாசகர் பக்கம் ஜோக் படித்து திக்கு முக்காடி போனேன். எம்எஸ்என் மெசஞ்சர் பற்றி தெளிவாகவும், விரிவாகவும் விளக்கிய தற்கு நன்றி. பாராட்டுகள். ஆன்லைனில் தொலைக்காட்சி சரி, ஆன்லைன் ரேடியோ பற்றிய விரிவான கட்டுரைகள் வெளியிடுவீர்களா?

-வண்ணை கே. ராஜா,
16, என்என் கார்டன் 4வது சந்து,
பழைய வண்ணை, சென்னை-21.

தாங்கள் அளித்த டிப்ஸ்க்கு நன்றி. வரும் இதழில் ஆன்லைன் ரேடியோ பற்றிய கட்டுரை வெளியிடப்படும்.

-ஆர்

சென்ற இதழில் எம்எஸ்என் மெசஞ்சர் பற்றிய கட்டுரை அருமையாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது. மேலும் இதுபோன்ற கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம். இன்டர்நெட் உலகம் இதழின் அட்டைப் படங்கள் அருமை.




மேலும் உள்ள சில முக்கியமாக பக்கங்களையாவது வண்ணத்தில் வெளியிட்டால் நன்றாக இருக்கும். விலை சற்று கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை. நாங்கள் வாங்கி படிக்கத்தயார். வண்ணத்தில் வெளியிட நீங்கள் தயாரா?

-சி. ஆறுமுகம்,
சென்னை-17.

நான் தங்களின் இன்டர்நெட் உலகம் இதழை தவறாமல் படித்து வருகிறேன். எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

-ஜி. பார்த்திபன், 51/1ஏ, வ.உ.சி.நகர்,
சுருளி லேஅவுட் தெரு, போடிநாயக்கனூர்.

நமது இன்டர்நெட் உலகம் இதழ் தொடர்பான உங்கள் கருத்துகள், காரசாரமான விமர்சனங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

**கணித்தமிழ் மீடியா**
60, மாடல் ஸ்கூல் ரோடு,
ஆயிரம்விளக்கு, சென்னை-600 006.
internetulagam@kanitamil.com.

# அரட்டையில் அசத்த!

அரட்டையில் புதியவர்களா நீங்கள்? அரட்டையில் தேர்ந்த நண்பர்களுடன் அரட்டையடிக்கும் போது அவர்கள் பயன்படுத்தும் சுருக்கச் சொற்களைக் கண்டு குழப்படைகிறீர்களா? இதோ 99.9999....%பேர் பயன்படுத்தும் சுருக்கச் சொற்கள், உங்களுக்காக.

| | |
|---|---|
| ASL | Age, Sex, Location |
| BBL | Be Back Later |
| BCNU | Be seeing you |
| BRP | Be Right back |
| BTW | By the way |
| CU | See you |
| CUL8R | See you Later |
| CWYL | Chat with you later |
| FYI | For your information |
| GR8 | Great |
| IHNI | I have no idea |
| IMO | In my opinion |
| IRL | In Real Life |
| LMAO | Larging my arseoff |
| LOL | Loughing our load |
| MSG | Message |
| ONNTA | Oh no, not this again |
| R | are |
| U | you |
| ROTFL | Rolling on the floor, loughing |
| ROTFLMAO | Rolling on the floor loughing my arse off |
| Thanx | Thanks |
| TRM | Thats Reminds you |
| TTFN | ta ta fou you |
| WB | Welcome back |
| WTG | Way to go |



சுசொஅநஅ - சுருக்கச் சொற்களை அளித்து நண்பர்களை அசத்துங்கள்.

-நெட்பூச்சி



படிப்பகம்

www.padippkam.com



# ஆண்கள் ஏமாற யார் காரணம்!?

நம் வாசக நெட்டிசன்களுக்கு ஆன்லைனில் ஏற்பட்ட சுவாரஸ்ய (அசடு வழிந்த) சம்பவங்கள், தமது கருத்துகள், அனுபவங்கள், ரசித்த ஜோக்குகளை இப்பகுதியில் பகிர்ந்து கொள்ளலாம். சிறந்தவைகளுக்கு சிறப்புப் பரிசுகள் உண்டு.
இம்மாதம் ஜோக்ஸ் அனுப்பிய வாசகர் : திரு. கே.பரமசிவம், paru vam2002@kanitamil.com.



ஒரு வினாடி வினா போட்டி அதில் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு நம்ம சர்தார்ஜி அளித்த பதில்களும்.

"ஒரு பாகிஸ்தானியரை நிலவுக்கு அனுப்பினால் என்னவாகும்?"

"நிலவில் பிரச்னை ஏற்படும்!".

"10 பாகிஸ்தானியரை அனுப்பினால்?"

"பிரச்சனை வளரும்!"

"100 பாகிஸ்தானியரை அனுப்பினால்?"

"பிரச்னை வளர்ந்து பெரிதாகும்."

"பாகிஸ்தானிலுள்ள அனைவரையும் நிலவுக்கு அனுப்பினால்?"

"(காஷ்மீர்) பிரச்சனை தீர்ந்து விடும்."

## வீரண்ணனின் 'டுமீல்' சாகசம்!

அமெரிக்க - ஈராக் போர் மூளுகிறது. ஈராக்குக்கு ஆதரவாக நம்மூரில் இருந்து ராணுவ வீரர்கள் அனுப்பப்படுகிறார்கள். அதில் நம்மூர்காரர் வீரண்ணன் தனியே எதிரிகளை அழிக்கத் திட்டமிடுகிறார். எனவே, அமெரிக்கப் படைகள் பதுங்கி இருக்கும் இடத்தில் உள்ள ஒரு பதுங்குகுழியில் ஒளிந்து கொண்டார். திடீரென "தாமஸ் ஆண்டர்சன்!" என அமெரிக்க வீரர் பெயர் சொல்லை அழைத்தார். உடனே "உள்ளேன் ஐயா" என்று தாமஸ் எழுந்ததும் 'படார்' என நம்மாள் சுட்டார். இதுபோல் ஒவ்வொரு வீரரின் பெயரைச் சொல்லி அழைத்து அவர்கள் குழியிலிருந்து எட்டிப் பார்த்ததும் சுட்டுத் தள்ளினார்.

இப்படியே வீரர்கள் செத்துமடிய அமெரிக்க கமாண்டர் சுதாரித்துக் கொண்டார். வீரண்ணன் பின்பற்றிய வழியிலேயே நாம் அவரைக் கொல்ல வேண்டும் என திட்டம் தீட்டினார். எனவே, திடீரென கமாண்டர், "வீரண்ணன்!" என உரக்கக் கத்தினார்.

சுதாரித்துக் கொண்ட நம்மாள், "யார் என்னை கூப்பிட்டது?" என கத்தினார்! உடனே அமெரிக்க கமாண்டர் யோசிக்காமல், "நான் தான் கூப்பிட்டேன்!" என எட்டிப் பார்த்தார். பிறகென்ன, டுமீல்தான்!

## சற்றுமுன் கிடைத்த சோகச் செய்தி!

அமெரிக்க தொலைக்காட்சியில் முக்கியச் செய்தி வாசிக்கப்பட்டது. "வணக்கம், சற்றுமுன் கிடைத்த செய்தி. 6 பேர் பயணம் செய்யக் கூடிய 747 ஜெட் விமானம் வானில் வெடித்து சுடுகாட்டில் விழுந்து சிதறியது. மீட்புப்படையினர் இதுவரை 3000 உடல்களை மீட்டுள்ளனர். சொந்தக்காரர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.!!"

## பயனாளரை மதிக்காத தமிழக அரசின் வலைமனை!

என் பெயர் சாந்தகுமாரி. மீஞ்சூரில் உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற தையற் கலை ஆசிரியை. ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கான புதிய சலுகை தொடர்பாக அரசு ஆணை ஒன்று பிறப்பித்தது. அந்த ஆணையின் எண்ணை (Govt.Order No) பல அரசு அலுவலகங்களில் தேடியும் கிடைக்கவில்லை. நண்பரின் ஆலோசனைப்படி www.tn.gov.in என்ற வலைமனைக்குச் சென்றேன். அதில் Govt.Orders என்ற பகுதியில்



படிப்பகம்




உள்ள அரசு ஆணைகளைத் தேடினேன் கிடைக்கவில்லை. பின் அந்த பக்கத்திலிருந்த ஒய்வூதிய அதிகாரியின் அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினேன். பதிலில்லை. தொடர்ந்து நான்கைந்து மின்னஞ்சல் அனுப்பினேன். (தொடர்புடைய அனைத்து அலுவலக முகவரிகளுக்கும் மின்னஞ்சல் அனுப்பியாயிற்று)

ஒரு பதிலுமில்லை. ஒரு வாரம் கழித்து மீண்டும் அந்த வலைமனைக்குச் சென்று பார்த்தபோது, புதிய அரசு ஆணைகளை அப்டேட் செய்யாமல் அப்படியே வைத்திருந்தனர். ஆனால் பத்திரிகைகளில் வெளிவரும் அரசு குறிப்புகளில் எந்த சந்தேகங்களானாலும் தமிழக அரசின் வலைமனையில் சென்று தெளிவு பெறலாம் என கூறுகிறார்கள். விளக்கங்கள் அளிக்கவில்லையென்றாலும் அனுப்பிய மின்னஞ்சலுக்கு பதிலாவது அனுப்பியருக்கலாம். இன்று வரை நான் அந்த ஆணை எண்ணை தேடிக் கொண்டிருக்கிறேன்....

-ஜே. சாந்தகுமாரி, மீஞ்சூர்.

## ஆண்கள் ஏமாற அவர்களே காரணம்!

சென்ற இதழில் ப. முகைதீன் என்ற நண்பர் 'அப்பாவி' என்ற போர்வையில் தான் ஆன்லைனில் பெண்களால் அவதிப்பட்ட அனுபவத்தைக் கூறினார். பெண்கள் ஐடியில் அவர் நண்பர்கள் வந்து பேசினாலும் இவர் தீர விசாரித்தோ, அல்லது மேலோட்டமாக பேசியோ இருந்தால் நண்பர்கள் அதிகம் விளையாடிருக்க மாட்டார்கள்.

பெண்ணின் பெயர் கொண்ட ஐடி என்றால் உடனே 'ஹாய்' சொல்லி ஒரு மின்னஞ்சலும் கூட நான்கைந்து கிரிட்டிங் கார்டுகளும் அனுப்பி விடுகின்றனர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு நான்தான். சென்ற இதழில் ஒரு கேள்விக்கு (ஆன்லைன் அறிவுப்பாலம்) மின்னஞ்சல் மூலம் விடையளித்தேன். நமது இதழில் வெளிவந்த என் மின்னஞ்சல் முகவரிக்கு இதுவரை 23 மின்னஞ்சல்கள் வந்துள்ளன. அவற்றில் 60சதவீதம் மின் வாழ்த்து அட்டைகள். இப்படி இருந்தால் யார்தான் முகைதீன் போன்றோரை ஏமாற்றமாட்டார்கள்? எனவே, ஆண்கள்: பெண்ணின் பெயர் கொண்ட முகவரியாக இருந்தாலும் மேம்போக்கான அணுகுமுறைகளையும் இயல்பான பேச்சையும் பின்பற்ற வேண்டும். நல்ல நண்பர்கள் நிச்சயம் கிடைப்பார்கள்.

பெண்கள் : பயனுள்ள நல்ல விளைவுகளைத் தரும் இடங்களுக்கு மட்டுமே மின்னஞ்சல் முகவரியை அளிக்க வேண்டும். ஆண்களை ஏமாற்றலாம் என்று ஆன்லைனில் விளையாடினால் பாதிக்கப் படுவோர் நாமாகத்தானிருப்போம். நல்ல தொழில் நுட்ப அறிவு மிகுந்த நண்பர்களை பெறுவது என்பது நம் அணுகுமுறையிலேயே உள்ளது.

கே. வான்மதி
vanmathi_moon@kanitamil.com

**கணிப்பொறி பட்டதாரிகள் தேவை!**

நமது கம்ப்யூட்டர் உலகம் மற்றும் இன்டர்நெட் உலகம் இதழ்களுக்கு மாவட்டம்தோறும் கமிஷன் அடிப்படையில் செய்தி மற்றும் விளம்பரங்கள் சேகரிக்க கணிப்பொறி பட்டதாரிகள் தேவை.

தன் விவரக் குறிப்புகளை (Bio-Data) புகைப்படத்துடன் அனுப்பி வைக்கவும்.

முகவரி :
கணித்தமிழ் மீடியா
60, மாடல் ஸ்கூல் ரோடு,
ஆயிரம்விளக்கு, சென்னை-600 006.
e-mail: computerulagam@kanitamil.com

www.padippkam.com



# இணையம் பாதுகாப்பானதா?

ஆற்காடு விஜய்

இன்டர்நெட் உள்ளங்கைக்குள் உலகை அடக்கி விடக் கூடிய நவீன தொழில்நுட்ப வரவு. நொடியில் நமக்கு தேவையான தகவல்களைப் பெறவும், அனுப்பவும் இதைவிட மேலான வசதி எங்கும் இல்லை. ஆனால் இணையத் தொழில் நுட்பத்தில் நாம் வெறும் வசதி, வாய்ப்புக்களை மட்டும்தான் பெறுகிறோமா? சங்கடங்களை சந்திக்க நேர்வதில்லையா?

ஏன் இல்லை? இன்பமும், துன்பமும், மழையும், வெயிலும் இருளும் ஒளியும் என்பது போல இன்டர்நெட்டில் நன்மையும் தீமையும் அடங்கிக் கிடக்கிறது. மேலை நாடுகளில் பல நவீன முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், இணையத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்கும் வழியறியாமல் இன்னும் திகைப்பில்தான் இருக்கின்றார்கள். இணையத்தில் காணப்படும் பல்வேறு இடர்பாடுகளைக் களையவும், மிக பாதுகாப்பான இணைய உலாவை மேற்கொள்ளவும் அங்கு பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவை பொறுத்தவரை கம்ப்யூட்டர் யுகத்தின் முதல் தளத்தில்தான் நாம் இன்னும் இருக்கிறோம். இணையத்தை முழுமையாக, அதன் ஆற்றல் அறிந்து பயன்படுத்துவோர் இந்தியாவில் ஒரு சதவீதம் கூட இல்லை என்றே சொல்லலாம்.

அதனால் இணையத்தைக் குறித்த அறிவும் அதில் எதிர்படும் இடர்களை களையும் திறனும் இங்கு சற்று குறைந்து காணப்படுகிறது. இணையத்தில் வைரசை பரப்புபவர்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் இங்குள்ள காவல்துறைக்கு இல்லை.

மிக மோசமான இ-மெயில் செய்திகளையும், ஆபாசப் படங்களை தயாரித்து இணையத்தில் வெளியிடுவோரையும் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் நிறுத்தி தண்டனை வாங்கித்தர காவல் துறையினரால் முடிவதில்லை. கணினித் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பயன்படுத்தி டெல்லி, பீகார், தமிழகம் போன்ற மாநிலங்களில் ஆபாசப் படமெடுத்து இணையத்தில் வெளியிட்டோரை காவல்துறை அண்மைக் காலத்தில் கண்டுபிடித்து கைது செய்திருந்தாலும், நீதிமன்றத்தில் சரியான ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டால் மட்டுமே குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கும்.

அடுத்து இணையத்தில் இ-மெயில் அனுப்பும் பிரச்னை. இ-மெயில் பயன்படுத்துவோர்க்கு ஸ்பாம் மெயிலாளர்களுடன் நடக்கும் சண்டையில் பாதி நேரம் போகிறதென்றால், முகம் தெரியாமல் மெயில்களை அனுப்புவோருடன் போரிடுவதில் மீதி நேரம் வீணாகிறது. இது உருவமில்லாத மாயாவியுடன் சண்டையிடுவது போலாகும்.

யார் நமக்கு இ-மெயில் அனுப்புகிறார்கள் என்று தெரியாமலே நாம் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இதற்கு போலீசின் துணையை நாடினால், அவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு பற்றாக்குறை. அதன்





படிப்பகம்

www.padippkam.com



காரணமாக எதுவும் செய்ய முடியாத நிலை.

இம்மாதிரி ஆபாசமான இ-மெயில்களை அனுப்புவோர் இன்டர்நெட் மையங்களில் இருந்து செய்தி அனுப்பிவிட்டு பறந்து விடுகின்றனர். தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்டு மையத்தை போலீஸ் முற்றுகையிடுவதற்குள் செய்தி அனுப்பியவன் தப்பிவிடுகிறான். ஆனால் காவல் துறை சொல்வது போல் போலி இ-மெயில் அனுப்புபவரின் முகவரியைக் கண்டுபிடிப்பது ஒன்றும் அவ்வளவு கடினமானதல்ல.

ஒரு அலுவலகத்தில் இயங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட சர்வர்களில் மெஷின் அட்ரஸ் கோடு (Machine Address Code) மூலம் அனுப்புவோரின் முகவரியை மோப்பம் பிடித்து அறியமுடியும். நெட்டிரேஸ் (Net trace) போன்ற சாஃப்ட்வேர்கள், ஒவ்வொரு செய்திக்கும் ஒரு கோடை உருவாக்கி, அனுப்பியவரின் இடத்தைக் காட்டிக் கொடுத்துவிடும்.

இம்மாதிரி போலி இ-மெயில் பிரச்சனைகளை சமாளிக்க இ-மெயில்களுக்கென பிரத்யேக கோடுகளை அளிக்கும் சாஃப்ட்வேரை உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய சாஃப்ட்வேரின் தேவைகள் அதிகரிக்கும். இத்தகைய மென்பொருள்கள் இ-மெயில்கள் அனுப்புவோருக்கும் பெறுவோருக்கும் இடையில் மட்டும் தெரியும்படியான சந்கேத கோடுகளைக் கொண்டிருக்கும் என்பதால் ஒருவரின் ரகசிய செய்திகளை வெளியார் யாரும் அறிய முடியாது.

இத்தகைய வசதிகள் வந்தால் மட்டுமே இணையத்தில் முழுமையான, பாதுகாப்பான செய்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவதில் அர்த்தம் இருக்கும். அப்படி இல்லாத பட்சத்தில் உள்ளங்கைக்குள் உலகம் வந்தாலும் அதில் பொருளிருக்காது. ●

# வருகிறது, பிளேடு சர்வர்!

கம்ப்யூட்டர்களுக்கான சர்வர்கள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறது சன் மைக்ரோ சிஸ்டம்ஸ். வன்பொருள், மென்பொருள் தயாரிப்போடு சேவைத் துறையிலும் ஈடுபட்டு வரும் சன், சர்வதேச அளவில் மிக நவீனமான சர்வரை அறிமுகப் படுத்தி உள்ளது.

பிளேடு சர்வர் என்றழைக்கப்படும் இந்த சர்வரின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக கிட்டத்தட்ட 500 மில்லியன் டாலரை செலவழித்துள்ளது சன்.

சர்வர்துறையில் மிகப்பெரிய சாதனையாக இந்த பிளேடு சர்வர் கருதப்படுகிறது. ஏனெனில் தற்போது புழக்கத்தில் உள்ள செர்வர்களைப் போல் அல்லாமல் மிக எளிமையாகவும், மெல்லியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதுதான் அதற்கு காரணம். ஓராண்டுக்கு முன்னர் ஆர்எல் எக்ஸ் நிறுவனத்தார்தான் முதல் பிளேடு சர்வர்களை அறிமுகப் படுத்தினார்கள். ஆனால் தற்போதுதான் இத்தகைய சர்வர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. விற்பனையாளர்களும் இத்தகைய சர்வர்களை வாங்குவதில் அதிகம் ஆர்வம் உடையவர்களாக இருக்கின்றனர்.

சன் நிறுவனத்தின் போட்டியாளர்களான ஐபிஎம், ஹெவ்லெட் பேக்கர்டு ஆகியவை ஏற்கனவே பிளேடு சர்வர்களின் தயாரிப்பில் இறங்கி விட்டன. சற்றே தாமதமாக வந்தாலும் சந்தையைக் கைப்பற்றும் விதத்தில் தடாலடியாக சன் நிறுவனத்தின் விளம்பரங்கள் அமைந்துள்ளன. இதர எந்த சர்வரும் தனது தயாரிப்புக்கு நிகரில்லை என்று சவால் விடுகிறது சன். லினக்ஸ் அல்லது சோலாரிஸ் இயக்கத் தொகுப்பு என இரண்டிலும் இயங்கக் கூடிய வகையில் சன் பிளேடு உருவாக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பாகும். அது மட்டுமல்ல, 64 பிட் பிளேடு (ஸ்பார்க்/சோலாரிஸ்) மற்றும் X86 பிளேடு என இருவகை சர்வர்களை சந்தையில் அறிமுகப் படுத்தி இருப்பதும் சன் நிறுவனம் மட்டுமே.

எல்லாவற்றுக்கும் மேலாக, வழக்கமான சர்வர்கள் குறுக்குவாட்டில் அமைந்திருப்பதால் அலுவலகத்தில் கணிசமான இடத்தை அடைத்துக்கொள்ளும். புதிய பிளேடு சர்வர்கள் அப்படி அல்ல



அவை நெருக்குவாட்டில் நிறுத்தி வைக்க ஏற்றதாக உருவாக்கப்பட்டிருப்பதால், சிறிய இடத்திலும் மிக அதிகமான சர்வர்களை வைக்க முடியும். இத்தகைய வசதிகள் கொண்ட பிளேடு சர்வர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

-கிருஷ்ணா

Owned and Published by A.S. Mahendran from 7, Gopala Menon Road, Kodambakkam, Chennai-24. and Printed by K. Prakash at New Karthick Printers, 26A, II Street, Bharatheeswarar Colony, Kodambakkam, Chennai-600 024. Editor : A.S. Mahendran



படிப்பகம்

# TAMIL CD's




• 10 Fonts • 2500 Cliparts




• Tamil Fonts Pack for Windows




• 2500 Cliparts & Borders




• 12 Songs with Animations




• Asanas with video clips




• Explanations of 5 Authors

**Softview** 118.Nelson Manickam Road, Chennai-600029
Tel: 23742471/ 23741053 Madurai: 2347467

www.padippkam.com

Tamil Inter ..agam Tamil Monthly
Registered with the Registrar of Newspaper for India Under No, TNTAM/1999/290
Registered No. TN/PMG-(CCR)/761/03-05

You can
Win 75%
Scholarship
On total fee

SCHOLARSHIP APTITUDE TEST
10th Year
SAT 2003

அறிவுத்திறனை நிரூபித்து...
வெல்லுங்கள்!

SAT 2003
SCHOLARSHIP APTITUDE TEST
FOR DESERVING STUDENTS

ADMIT CARD இலவசம். தேர்வு கட்டணம் இல்லை.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள CSC கிளையை அணுகவும்.

April
6
6-4-2003
SUNDAY
Just spend 15 minutes only

CSC®
COMPUTER EDUCATION
ISO 9001:2000 Certified Institution

260 CENTRES ALL OVER SOUTH INDIA
NOW ALSO AT SRILANKA & BANGLADESH

படிப்பகம்